Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 111 | புதன்கிழமை | பங்குனி 4 ஆம் நாள் 17 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111


## குருதிக் கொடைக்காக திரண்ட பொதுமக்கள்

மன்னார், மார்ச் 17
தலைமன்னாரில் நேற்று நடந்த ரயில் - பஸ் விபத்தில் பலர் காயமடைந்து மன்னார் மருத்துமனையில் சேர்க்கப் பட்ட நிலையில், அங்கு குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதையடுத்து குருதிக் கொடை 19

# தமிழினத்துக்கு நீதி கோரி நல்லூரில் இன்று பேரணி

- கட்சிகள், அமைப்புக்கள் என பல தரப்புகளும் ஆதரவு
- தமிழ் பேசும் மக்கள் திரள வேண்டுமென அறைகூவல்

யாழ்ப்பாணம், மார்ச் 17
தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரியும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தக் கோரியும் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் பெரும் பேரணி நடத்தப்படவுள்ளது. இந்தப் பேரணி நல்லூர், சங்கிலியன் பூங்காவில் இருந்து முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. 19



## ரயிலுடன் மோதியது பஸ்; 14 வயது மாணவன் சாவு! 25 பேர் படுகாயம்

மன்னார், மார்ச் 17
மன்னாரில் தனியார் பயணிகள் பஸ் ரயிலுடன் மோதியதில் 14 வயது மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். 13க்கும் மேற்பட்ட மாணவர்கள் உட்பட 25 19

## புர்காவுக்கு தடையில்லை; முன்மொழிவு மாத்திரமே

வெளிநாட்டு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 17
புர்காவுக்கு தடைவிதிப்பதற்கான தீர்மானங்கள் அரசால் மேற் 19

## வெளிநாடுகளில் வசிப்பவர்கள் வாக்காளர் பதிவில் அலட்சியம்

வாக்காளர் எண்ணிக்கை 30 – 40 ஆயிரங்களால் குறையலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப் படாத கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த, தற்போது வெளிநாடுகளில் வதிபவர்கள் வாக்காளர்களாகப் பதிவுசெய்து கொள்வதற்கு வழங்கப்பட்ட வாய்ப்பை உரிய வகையில் பயன் 19

## பருத்தித்துறையில் நேற்று மாணவிக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், மார்ச் 17
வடக்கில் நேற்று மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் பருத்தித்து 19

## மாகாணத் தேர்தல் அறிவிப்பு; இந்தியா காரணம் இல்லை!

கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17
மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பின் ஓர் அங்கம். எனவே, தேர்தலை நடத்த வேண்டியது 19

## இலங்கை இராணுவத்தினர் போர்க் குற்றம் புரிந்தனர்

முன்னாள் தளபதி ஒப்புதல்

கொழும்பு, மார்ச் 17
மிருசுவில் படுகொலையுடன் தொடர்புடைய முன்னாள் இராணுவச் சிப்பாய் சுனில் ரத்னாயக்கவின் செயல்கூட போர்க்குற்றம்தான். அதனால் போர்க் குற்றச் 19

## அசாத் சாலி கைது!

கொழும்பு, மார்ச் 17
மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி 14

## நாயாறில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, மார்ச் 17
முல்லைத்தீவு, நாயாறு பிரதேசத்தில் நேற்று 14

## உருத்திரபுரீச்சரமும் பறிபோகும் அபாயம்!

கைவைக்கிறது தொல்லியல் திணைக்களம்

கிளிநொச்சி, மார்ச் 17
கிளிநொச்சி, உருத்திரபுரீச்சரம் சிவனாலய வளாகத்தில் தொல்பொருள் திணைக்களம் அகழ்வாராய்ச்சிக்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. கோயில் வளாகம் தொல்பொருள் திணைக்களத்தால் நேற்று துப்புரவாக்கப்பட்டது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். வடக்கில் உள்ள புராதன ஆலயங்களை தொல் 14

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் ரீக்க் கடன் 011 200 88 88 செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)

இதயம் போதும் எனும் வரை SCROLL செய்யுங்கள்
விரல்கள் போதும் எனும் வரை CHAT செய்யுங்கள்
கண்கள் போதும் எனும் வரை VIDEO பாருங்கள்
9 App data 2GB.
398 #170# SELFCARE APP
TRC/M/PRO/20/07
www.sltmobitel.lk
MOBITEL Non-Stop வொக்கா
SLTMOBITEL

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆழமாக ஆராய்ந்த பின்பே புர்கா விடயத்தில் முடிவு

## எதிர்ப்பையடுத்து அரசு தயக்கம்

**கொழும்பு, மார்ச் 17**

**புர்காவை தடைசெய்வது தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து, அவசரப்படாமல் உரிய வகையில் முடிவெடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல நேற்றுத் தெரிவித்தார்.**

புர்காவைத் தடைசெய்வதற்கான பத்திரம் அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அறிவித்திருந்தார். எனினும், நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இப்பத்திரம் முன்வைக்கப்படவில்லை. இதற்கான காரணம் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

புர்காவுக்கு தடைவிதிப்பது தொடர்பில் விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன. ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கடந்த 15 வருட காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள கலாசார மாற்றங்கள் ஆகியவற்றை மையப்படுத்தியே இக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

புர்காவால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என்ற கருத்து இங்கு மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் இருக்கின்றது. இது சம்பந்தமாக கலந்துரையாடப்படுகின்றது.

எனவே, இதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது தொடர்பில் அவசரப்படாமல், நேரத்தை எடுத்தாவது ஆராய்ந்து பரந்துபட்ட கலந்துரையாடலுக்கு பின்னர் முடிவெடுக்கப்பட வேண்டும். எனவே, உரிய கால எல்லையை குறிப்பிட முடியாது-என்றார். (மப-44)

# பழமையான ஆலயத்தை இடித்து புதிய ஆலயம் அமைக்க முயற்சி?

## முத்தரிப்புத்துறையில் சம்பவம்



மன்னார், மார்ச் 17

மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட முத்தரிப்புத்துறையில் பழமைவாய்ந்த ஆலயம் ஒன்றை தரைமட்டமாக்கி விட்டு, அந்த இடத்தில் புதிய ஆலயம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்துக்கு முறையிட்டு பழமை வாய்ந்த ஆலயத்தைத் தகர்க்க இடமளிக்கக் கூடாது எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

முத்தின் வித்தகமாகிய முத்தரிப்புத்துறையில் பழமையை அழித்து, புதியதை அமைப்பதில் சிலர் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். 350 வருடங்களுக்கு மேலாக பழமைமிகு புனித செங்கோல் அன்னையின் ஆலயமானது இந்தப் பகுதி கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமல்ல, மன்னார் மறைமாவட்ட மக்களுக்கு மூதாதையர் வழங்கிய ஒரு ஆன்மீகச் சொத்தாகவும், வரலாறு படைத்த ஒரு ஆலயமாகவும் காணப்படுகிறது. இந்த நிலையில் மேற்படி ஆலயத்தை இடித்துவிட்டு இவ்விடத்தில் ஒரு ஆலயம் அமைப்பதற்காக கிராமத்தைச் சேர்ந்த சிலர் முயற்சித்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும் பழமையைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்ட அந்த பிரதேசத்தைச் சேர்ந்த பலர் ஆலயத்தை தரைமட்டமாக்காது பாதுகாக்க வேண்டும் எனக்கோரி தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவித்திருப்பதுடன் இது விடயமாக பொலிஸாரின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-60)

# பாகிஸ்தானின் தேவைக்கேற்ப தீர்மானம் எடுக்க முடியாது!

## சீண்டுகிறார் வீரசேகர

கொழும்பு, மார்ச் 17

பாகிஸ்தான் அரசின் தேவைக்கேற்ப இலங்கையில் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மிரிஹான பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் புர்கா தடை தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இலங்கை அரசின் தேவைக்கேற்ற விதத்திலேயே நாம் செயற்படுகின்றோம். புர்கா தடை விடயம் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டு, பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் காலத்தில் எவ்வாறான பதில் கிடைக்கும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் - என்றார். (எ-22)

# பதுக்கியுள்ள நெல்லைத் தேடி சுற்றிவளைப்பை மேற்கொள்க

## ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, மார்ச் 17

தற்போது மறைத்து வைக்கப்பட்டுள்ள நெல்லைத் தேடி சுற்றிவளைப்புகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வர்த்தக மற்றும் விவசாய அமைச்சர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். ஜனாதிபதியின் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

தற்போது நிலவும் சூழ்நிலையில் அரிசி இறக்குமதி செய்யாமலிருக்க இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் கையிருப்பிலுள்ள நெல்லை அரிசியாக மாற்றி, சதொச வர்த்தக நிலையங்கள் ஊடாக பகிர்ந்தளிப்பதற்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் அரிசி விலையில் அதிகரிப்பு ஏற்படுமாயின் அரசியை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ப)

# கொவிஷீல்ட் தடுப்பூசியை நிறுத்தும் திட்டம் இல்லை

## அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

ஐரோப்பாவின் பல நாடுகளில் அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியின் பயன்பாடானது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளபோதிலும், இலங்கையில் அந்தத் தடுப்பூசியின் பயன்பாட்டை நிறுத்த எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரியா, எஸ்டோனியா, லிதுவேனியா, நோர்வே, ஐஸ்லாந்து மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட பல நாடுகளில் அஸ்ட்ராஜெனெகா கொவிட் - 19 தடுப்பூசியின் பயன்பாடானது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களுக்கு ஏற்பட்ட இரத்த உறைவு போன்ற பக்கவிளைவுகளின் அச்சம் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையில் அதன் பயன்பாடு தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ப)

## கொழும்புத் துறைமுகத்தின்

# மேற்கு முனையம் இந்தியா வசமானது

கொழும்பு, மார்ச் 17

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 51 சதவீதமான பங்குகள் இந்தியாவின் அதானி குழுமத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனை அந்த நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது.

மேற்கு முனையம் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது என வெளியான தகவல்களை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் கடந்த வாரம் மறுத்திருந்த நிலையில், இந்தியாவின் அதானி குழுமம் 'மேற்கு முனையம்' வழங்கப்பட்டமைக்கு இலங்கைக்கு நன்றியைத் தெரிவித்துள்ளது.

நல்லாட்சி அரசின் காலத்தில் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியா, ஜப்பான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் முத்தரப்புக் கூட்டாக இணைந்து தற்போது அபிவிருத்தி செய்ய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன. தொழிற்சங்கங்கள் போராட்டம் நடத்தின. இதனையடுத்து கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் முடிவு கைவிடப்பட்டது. இதன் பின்னர் கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையம் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது என இலங்கை அரசு அறிவித்திருந்தது. ஆனால், மேற்கு முனையம் இந்தியாவுக்கு வழங்கப்படவில்லை என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் மேற்கு முனையத்தின் 51 வீத முதலீட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று இந்தியாவின் அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

'இலங்கைத் துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சிடமிருந்து, ஒப்பந்தம் குறித்த கடிதத்தைப் பெற்றுக்கொண்டுள்ளோம். இலங்கையின் மிகப்பெரிய பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பவற்றுடன், மேற்கு முனைய பங்குகளை அதானி குழுமம் பகிர்ந்து கொள்கிறது.

அரச தனியார் கூட்டு அபிவிருத்தித் திட்ட ஒப்பந்தம் 35 வருடங்களுக்கு செல்லுபடியாகும். மேற்கு கொள்கலன் முனையம், ஆயிரத்து 400 மீற்றர் நீளம் மற்றும் 20 மீற்றர் ஆழத்துடன், அல்ட்ரா லார்ஜ் கன்டெய்னர் கேரியர்களைக் கையாளத்தக்க பிரதான போக்குவரத்து சரக்கு இடமாக மாறும்' என்று அதானி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தை நிர்மாணிப்பதற்காக தமக்கு வாய்ப்பு வழங்கப்பட்டமைக்கு அதானி குழுமத்தின் உரிமையாளர் கௌதம் அதானி இலங்கை அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

(ஒ.ஐ.இ)

# மஹிந்தவுக்கு எதிராக வாக்களித்ததால் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம்

## சந்தேகத்தை கிளப்பினார் ஹக்கீம்

கொழும்பு, மார்ச் 17

**தமிழ், முஸ்லிம் சமூகங்களே 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் போது, அவ்வேளை ஆட்சியிலிருந்தவர்களுக்கு எதிராக வாக்களித்திருந்தன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் திட்டமிட்டு உருவாக்கப்பட்டமைக்கான காரணம் இதுவாகவிருக்கலாம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

அல் ஜசீரா ஊடகத்துக்கு இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிறிய குழுவொன்றுசெய்த தவறுகளுக்காக முஸ்லிம் சமூகத்தின் மீது களங்கமேற்படுத்துவதற்காக அவசியமற்ற விதத்தில் முன்னெடுக்கப்பட்ட விவகாரமொன்றுக்கு அளவுக்கதிகமாக எதிர்வினையாற்றும் நடவடிக்கையே புர்காதடையும் ஏனைய தடைகளுமாகும்.

இந்த நிகழ்ச்சி நிரல் போர் முடிவடைந்த காலம் முதல் நீண்ட காலமாகவே காணப்படுகின்றது.

போரின் முடிவு சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் வெற்றி பெற்றவர்கள் நாங்கள் என்ற உணர்வை உருவாக்கியது. அவ்வேளை ஆட்சியிலிருந்த அரசு முஸ்லிம்களை அடுத்த எதிரியாக சித்தரிக்கக்கூடிய விவரிப்பை உருவாக்க நினைத்தது.

இதன் மூலம் சிங்களப் பெரும்பான்மையினத்தவர்களை தங்கள் பக்கமே வைத்திருக்கலாம் என அது எண்ணியது.

இது அனைத்து வகையான இனவாதக் கொள்கைளாலும் நாளுக்கு நாள் ஓரங்கட்டப்படும் சமூகமொன்றை பூதாகரமாகச் சித்தரிக்கின்ற களங்கப்படுத்துகின்ற முயற்சியே தவிர வேறு எதுவுமில்லை.

இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் முஸ்லிம்களை களங்கப்படுவத்துவதற்காக - முஸ்லிம்களை கத்தோலிக்கர்களுக்கு எதிராக மோதவிடுவதற்காக சில புலனாய்வு நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்டவர்கள் போல தோன்றுவதை சிங்கள பெரும்பான்மையினத்தவர்கள் உணர்கின்றார்கள் இல்லை. எங்களுக்கு கத்தோலிக்க சமூகம் உட்பட எந்தச் சமூகத்துடனும் பகைமையில்லை.

இந்த இரு சமூகங்களே 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் போது அவ்வேளை ஆட்சியிலிருந்தவர்களுக்கு எதிராக வாக்களித்திருந்தன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் போன்ற ஒன்று திட்டமிட்டு உருவாக்கப்பட்டமைக்கான காரணம் இதுவாகவிருக்கலாம் -என்றார். (ப)



## மைதானத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தினுடைய மைதானத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இலங்கைத் துடுப்பாட்டச் சங்கத்தின் அனுசரணையில் 'மல்லாகம் சிறி பாஸ்கரன் கிரிக்கெட் மைதானம்' என்ற பெயரில் இந்த மைதானம் அமைக்கப்பட்டது.

திறப்பு விழாவை முன்னிட்டு, யாழ். மாவட்டக் கழக வீரர்களை உள்ளடக்கி, இரு அணிகளாகப் பிரிக்கப்பட்டு துடுப்பாட்டப் போட்டியும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண துடுப்பாட்ட சங்கத் தலைவர், யாழ். மாவட்டத் துடுப்பாட்ட சங்கத் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ரு-320)

## தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் முழு நேர கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்படி, காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இருசக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்து நர், மின் இணைப்பாளர் மற்றும் கட்டட நிர்மாண உதவியாளர் ஆகிய கற்கைநெறிகள் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இக்கற்கைநெறிகளை பயில விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் , முதலாம் மாடி , வீரசிங்கம் மண்டபம், இல 12 , கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் அல்லது வலந்தலைச்சந்தியிலுள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ள முடியும் எனவும், மேலதிக தகவல்களுக்கு 021 221 1793 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

அபிவிருத்திக்குழுக் கூட்டத்துக்கு

## குரங்கு கடித்த தேங்காயுடன் சென்றார் சபைத் தவிசாளர்

துணுக்காய், மார்ச் 17



துணுக்காய் பிரதேச சபைத் தவிசாளர் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்துக்கு குரங்கு கடித்த தேங்காயுடன் சென்றுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு, துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் அ.அமிர்த லிங்கம் பிரதேசத்தில் குரங்குத் தொல்லை தாங்கமுடியாது உள்ளது என்று குரங்கு கடித்த தேங்காயை எடுத்துக் காட்டியுள்ளார்.

துணுக்காய்ப் பிரதே சத்தில் குரங்குகள் தென்னந்தோட்டங்களிலுள்ள தேங்காய் களை கடித்து சேதப்படுத்தி அழித்து வருகின்றன. இந்தக் குரங்குத் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு துப்பாக்கி வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளதுடன், துப்பாக்கி யைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைக் கடிதத்துடன் துப்பாக்கியைப் பெற்றுக் கொள்ளலாம் என இதன்போது எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (ரு-19)



## உறுதியான தலைக்கவசம் அணியுமாறு விழிப்புணர்வு

வவுனியா, மார்ச் 17

சர்வதேச பாவனையாளர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு தலைக்கவசத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது தரமான (எஸ்.எல்.எஸ் தரசான்றிதழ் பெற்ற) தலைக்கவசங்களை பயன்படுத்துவதன் அவசியம் தொடர்பாக வலியுறுத்தப்பட்டது.

வவுனியா மாவட்டத்தின் நகர் பகுதியில் இது தொடர்பான விவரங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், போக்குவரத்து பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மோட்டார் சைக்கிளில் பயணிப்போருக்கு இது தொடர்பாக அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. (வ-110,213)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

சுழிபுரம் விக்ரோறியன்ஸ் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கழகத்தின் தலைவர் ச.ஜயந்தன் தலைமையில் வரும் 3ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு விக்ரோறியாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு அனைத்து அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கழகத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ப)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கோப்பாய், மார்ச் 17

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ஐ)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தினூடாக, நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி ஒருவருக்கு விசேட மூன்று சக்கர வண்டி வழங்கப்பட்டது. (வ-222)

## இன்று...!

கொடிகாமம், மார்ச் 17

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மரவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ய-159)

## புதிய பரிபாலன சபை தெரிவு

கைதடி அருள்மிகு இயத்தை அண்ணமார் ஆலயத்தின் இந்த ஆண்டுக்கான புதிய பரிபாலன சபைத் தெரிவுகள் தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலய முன்றலில் நடைபெற்றது.

ஆலயத்தின் இவ்வாண்டுக்கான புதிய பரிபாலன சபையின் தலைவராக ச.சாணையனும், செயலாளராக சி.கஜேந்திரனும், பொருளாளராக கு.குகனும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் பதினொரு பேர் கொண்ட பரிபாலன சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ற-288)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்திலுள்ள சர்வோதய மண்டபத்தில் பூமணி அறக்கட்டளையும், பிரான்ஸ் தமிழ் வானொலியும் இணைந்து நடத்திய நிகழ்வில் 60 பெண்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அறக்கட்டளை அமைப்பின் தலைவரும், யாழ். மாநகரசபை உறுப்பினருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ற-இ)

## பொது மலசலகூடத்துக்கான மாற்றுத் தீர்வு முன்னெடுப்பு

முல்லைத்தீவு, மார்ச் 17

முல்லைத்தீவு மாங்குளத்தில் பொது மலசல கூடத்துக்கான தீர்வு எட்டப்பட்டுள்ளது என புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஊடக இணைப்பாளருமான முத்துசாமி முகுந்தகஜன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொது மலசலகூடத்தின் தேவை தொடர்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில் இறுதியாக இடம்பெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபை அமர்வில் இடநெருக்கடியால் உடனடியாக மலசல கூடம் அமைக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. இதற்கான மாற்றுத் தீர்வாக மாங்குளம் பொதுச் சந்தையின் மலசல கூடங்கள் பொது மலசலகூடமாக பயன்படுத்துவதற்கு ஏற்ப 15 நாள்களில் மாற்றித் தரப்படும் என தவிசாளர் உறுதியளித்துள்ளார்.

மலசலகூடத்துக்கு ஏ9 வழியூடாக செல்லுதல், மாங்குளம் துணுக்காய் வீதி வழியாக செல்லுதல் மற்றும் பொதுச்சந்தை வழியாக செல்லுதல் ஆகிய பாதைகளைப் பயன்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் உள்ள புனரமைக்கப்படாத மலசல கூடங்கள் அமைந்துள்ள காணியில் சனசமூக நிலையம் அமையவுள்ளது. அதன்போது அவை புனரமைக்கப்படும் எனவும் தெரிவித்தார். (வ-13)

# காரைநகர்-மாந்தை கிழக்கு அரச போக்குவரத்து நிறுத்தம்

### மக்கள் பெரும் சிரமம்

**முல்லைத்தீவு, மார்ச் 17**

**கொரோனாத் தொற்றுக் காரணமாக காரைநகரில் இருந்து மாந்தை கிழக்குக்குச் செல்லும் பஸ் இடைநிறுத்தப்பட்டமையால் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்து செய்வதில் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் ம.தயானந்தனால் இந்த விடயம் சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தவிடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

அண்மையில் காரைநகர் சாலையில் பணியாற்றுபவர்களுக்கு கொவிட் - 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து குறித்த சாலையின் போக்குவரத்துக்கள் சில மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு மாந்தை கிழக்குக்கு செல்லும் பஸ்சேவை தடைப்பட்டுள்ளதால் அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் போக்குவரத்து சேவையை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்றார்.

"முல்லைத்தீவு போக்குவரத்து சாலைக்கு ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகிறது எனவும், பஸ்கள் போதியளவு இருந்தும் 15 ஓட்டுநர்கள், 15 நடத்துநர்கள் உள்ளிட்ட ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருகிறது" என்றும் முல்லைத்தீவு சாலையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-19)

## பதிவாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

மன்னார், மார்ச் 17

மாவட்டங்களில் நிலவி வரும் வெற்றிடங்களை நிரப்புமுகமாக பிறப்பு இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களுக்கான விண்ணப்பங்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் கோரப்பட்டுள்ளன.

ஏற்கனவே இவ் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தாலும் தற்பொழுது விண்ணப்பதாரிகளின் வயது எல்லை நீடிக்கப்பட்டதுடன் விண்ணப்ப இறுதிக் காலமும் நீடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில், தலைமன்னார் மற்றும் மாந்தை தெற்குப் பிரிவுகளில் இவ் வெற்றிடங்கள் காணப்படுவதால் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் விண்ணப்பத்தாரிகளுக்கு வயது வருடங்கள் 30க்கு குறையாத 55 வயதுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும். ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-60)

### மாந்தை கிழக்கில்

## நீண்டகாலமாக இயங்காத நிலையில் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை

முல்லைத்தீவு, மார்ச் 17

மாந்தை கிழக்கு பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை இயங்காத நிலையில் பொதுமக்கள் தமது சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே இந்த விடயம் அபிவிருத்திக்குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

மாந்தை கிழக்கு பிராந்திய சுகாதார பணிமனை உருவாக்கிய காலத்தில் இருந்து இதுவரை அந்தப் பணிமனை இயங்காத நிலை காணப்படுகின்றது. மல்லாவி பிராந்திய சுகாதார பணிமனையே இந்த பிரதேசத்தை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அபிவிருத்திக்குழுக்க கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-19)

## கல்மடுநகர் பாலத்துக்கு அடிக்கல் நடுகை

கிளிநொச்சி கல்மடுநகர் பாலத்தை கட்டித்தருமாறு கல்மடுநகர் மக்கள் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், குறித்த பாலத்துக்கான அடிக்கல் நடப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாலத்தால், இதுவரை நீண்டதூரம் பயணித்து சிரமங்களுக்கு உள்ளான விவசாயிகளும், பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பயனடையவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## நிர்வாகத்துக்குள் குழப்பத்தை உண்டுபண்ண சிலர் முயற்சி

### வவுனியா உதைபந்தாட்ட சங்கத் தலைவர் தெரிவிப்பு

வவுனியா, மார்ச்.17

வவுனியாமாவட்ட உதைபந்தாட்ட சங்கத்துக்குள் நிர்வாகச் சீர்கேட்டை ஏற்படுத்தி, அதனை சீர்குலைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என்று வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட சங்கத் தலைவர் நாகராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட சங்கம் 20 கழகங்களை உள்ளடக்கிய வகையில் மிகவும் சிறப்பான கட்டமைப்பாக செயற்பட்டு வருகின்றது.

எனினும் எமது சங்கத்தின் வளர்ச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியாத சிலர் ஒரு சில கழகங்களை பகடைக்காய்களாக வைத்துக் கொண்டு நிர்வாகசீர்கேட்டை ஏற்படுத்துவதற்கு திரைமறைவில் முயற்சிசெய்து வருகின்றனர். எனினும் அவர்களது எண்ணம் கைகூடாது. தற்போது உள்ளூர் மட்டத்தில் சில சுற்றுப் போட்டிகளை நடத்துவதற்காக கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளோம்.

அத்துடன் விளையாட்டு நுணுக்கங்கள் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்றும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. தேசியரீதியில் திறமையான உள்ளூர் வீரர்களை இனம் கண்டு அவர்களுக்கான வாய்ப்புக்களை உருவாக்கிக்கொடுப்பதற்கு சங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றுள்ளது. (ஐ-110)

## ஒரு வருடத்தில் 10 யானைகள் உயிரிழப்பு!

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு வருடத்தில் பத்து காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என்று வவுனியா மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன .

அந்தவகையில் வவுனியா செட்டிகுளத்தில் 4 யானைகளும், நெடுங்கேணி மற்றும் வவுனியாவில் தலா 3 யானைகளும் உயிரிழந்துள்ளன.

தற்போது வவுனியா மாவட்டத்தில் காட்டு யானைகள், மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைவதுடன் மக்களின் வாழ்வாதாரங்களையும் அழித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-110)

# நீதிக்கான குரலை பலமாக்குவோம்

ஜெனிவாச் சமர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. ஆரம்பத்தில் மென்மையான சொற்களைக் கொண்டு பின்னப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணை ,இப்போது மிக இறுக்கமான சொற்களாலான இரும்பு வலையாக மாறியிருக்கிறது. இந்த வலையில் இருந்து இலங்கை அவ்வளவு எளிதில் தப்பமுடியாது என்றே புலம்பெயர் தமிழர் தரப்புகள் நம்புகின்றன. ஆனாலும் ,ஓர் அரசுக்கு எதிராக அவ்வளவு சுலபத்தில் ஐ.நா. நடவடிக்கை ஏதும் இதுவரை எடுத்ததில்லை, இனியும் எடுக்கப்போவதில்லை என்பதே யதார்த்தம்.

எனினும் அதனையே முடிந்த முடிவாகக்கொள்ள தமிழர் தரப்புத் தயாரில்லை. அடி மேல் அடி அடித்தால் அம்மியையும் நகர்த்தலாம் என்கிறபோது ஐ.நா. மட்டும் எம்மாத்திரம்? அதனால் மெதுவான ஆனால் பலமான நகர்வுகள் மூலம் ஓரளவுக்கேனும் இலங்கை அரசுக்கு எதிரான நிலையை உருவாக்கி, பின்னர் அதனை வைத்தே அடுத்தடுத்த நகர்வுகள் மூலம் சர்வதேச நீதிமன்றத்தில் போர்க்குற்றங்களை விசாரிக்கும் நிலையை ஏற்படுத்துவதே தமிழர் தரப்பின் இப்போதைய திட்டம். அதனாலேயே ஜெனிவாவில் பிரிட்டன் தலைமையிலான நாடுகள் கொண்டு வரவுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு வலுச்சேர்க்கும் வகையில் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் அகிம்சை ரீதியான, அறப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.லண்டனில் 16 நாள்களாக உணவுத்தவிர்ப்பு போரில் ஈடுபட்ட அம்பிகை, நேற்று முன்தினத்தோடு தன் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்துள்ளார். அவரின் ஒரு கோரிக்கையை முழுமையாகவும், இன்னொன்றை பகுதியளவிலும் ஏற்றுக்கொள்வதாக பிரிட்டன் அரசாங்கம் உறுதிமொழி வழங்கியதை அடுத்தே அம்பிகையின் போராட்டம் நிறைவுக்கு வந்திருந்தது. ஒருவகையில் அவரின் அறப்போராட்டம் வெற்றியோடுதான் முடிந்திருக்கிறது.

அதே அறப்போராட்டத்தின் தொடர்ச்சியாக, ஜெனிவாவில் இலங்கைக்கு இன்னும் அழுத்தம் கொடுக்கும் வகையில் , தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி கேட்டும், அத்தகையை கொடூரங்கள் மீள நிகழாமையை வலியுறுத்தியும் இன்று கவனவீர்ப்புப் பேரணி ஒன்று யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச் சந்தியில் இருந்து நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பின்புறம் வரை( தற்போது உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுமிடம்) நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு கட்சி பேதமின்றி சகல தமிழ்த் தரப்புகளும் ஒன்றிணைந்து ஆதரவை வெளிப்படுத்தியுள்ளதோடு, மக்களைக் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளன.

'பொ–பொ' பேரணிக்கு பிறகு நடைபெறவுள்ள மிகப்பெரிய எதிர்ப்பு நடவடிக்கை இது என்பதால், இன்றைய கவனவீர்ப்பிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் அதை அதிகாரத்தரப்பு விரும்பாது. எனவே 'கொரோனா' அது இது என்று நொண்டிச்சாட்டுக்களை முன்வைத்து இன்றைய கவனவீர்ப்பைத் தடுக்க முனையலாம். இதேபோன்று 'பொ – பொ' பேரணியிலும் தடை போட அரசாங்கம் முயன்ற போதும், மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டதால் அந்தத் தடையெல்லாம் பொடிப்பொடியாக உடைந்து போயிற்று. அதேபோன்று இன்றும் மக்கள் தன்னெழுச்சியாக பெருமளவில் திரண்டு வந்தால், தடை போட்டால் கூட அதை பனி போல உருகச் செய்துவிடலாம். அதைவிட, எந்த அளவுக்கு மக்கள் திரள்கிறார்களோ அவ்வளவுக்கு எமக்கான நீதியின் குரலை இன்னும் பலமடையச் செய்யமுடியும். எனவே ஒன்றாகித் திரள்வோம், நீதிக்கான குரலை உலகறியச் செய்வோம்.




# 2024 ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் வேண்டாம்!

*பொதுவேட்பாளராக களமிறங்கிய பொன்சேகாவே எதிர்ப்பு*



**கொழும்பு, மார்ச் 17**

**2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரே வேட்பாளராக களமிறங்க வேண்டும் என்று அக்கட்சியின் தவிசாளர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

'2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை களமிறக்கமாட்டோம். கடந்த தேர்தல்களில் வாடகை வேட்பாளர்களை களமிறக்கியதால் ஏற்பட்ட விளைவுகள் அனைவருக்கும் தெரியும். எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்தான் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும். அது தொடர்பான அறிவித்தலை முன்கூட்டியே வெளியிட்டுள்ளமை வரவேற்கக்கூடிய விடயமாகும். இதன் போதுதான் மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படும்' எனவும் சரத்பொன்சேகா சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைத்துக்கொண்டு கூட்டணியாக பயணிப்பதற்கு நாம் தயார். ஆனால் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் அந்தக் கட்சியில் இருந்தால் அது சாத்தியப்படாது எனவும் சரத்பொன்சேகா குறிப்பிட்டார். 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக பொன்சேகாவும், 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக மைத்திரிபாலவும் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.44)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி கண்டிவாசி போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி கண்டியைச் சேர்ந்த டீமன் ஆனந்த என்பவர், யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா அருகாமையில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டார்.




இலங்கையில் குறிப்பாக வடக்கில் இளையோர் பலர் காணாமல் ஆக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இந்த அரசு உண்மையை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும். கடத்தல்கள் மற்றும் படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் என்னிடம் பல ஆதாரங்கள் உள்ளன. அந்த ஆதாரங்களை ஜெனிவாவிலும் சமர்ப்பிக்க உள்ளேன்.

கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களின் உண்மைத்தன்மை எதிர்கால சந்ததிக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். தற்போது போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற காணாமலாக்கப்பட்ட உறவுகள் சில காலங்களில் உயிரிழந்து விடுவார்கள். இவர்கள் எவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டார்கள்? எதற்காக காணாமல் ஆக்கப்பட்டார்கள்? என்ற உண்மை எதிர்காலச் சந்ததியினருக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

படுகொலைகள் மற்றும் கடத்தல்களில் ஈடுபட்டவர்கள் தற்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், மாகாண சபை உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களைக் கைது செய்யவேண்டும்.

நான் தமிழ் மக்களுக்கு எதிராகப் போராடவில்லை. அவர்களுக்கு ஆதரவாகவே போராடுகின்றேன் - என்றார். (ஒ.319)

முல்லைத்தீவின்

# மேற்கு எல்லைக் கிராமம் பறிபோகும் அபாயத்தில்!

**முல்லைத்தீவு, மார்ச் 17**

**முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் எல்லைக் கிராமங்களின் ஊடாகச் செல்லும் பறங்கி ஆற்றை அண்டிய பகுதிகள் பறிபோகும் அபாய நிலையில் உள்ளன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.**

பறங்கி ஆற்றை அண்டிய பகுதிகளிலுள்ள பொதுக் காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

அந்தப் பகுதிகளில் படையினர் காவலரண்களை அமைத்து கண்காணிப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்த ஆற்றை அண்டிய பகுதிகளிலுள்ள அனைத்து பொதுக் காணிகள், பற்றைக் காடுகள் மற்றும் பெரும் காடுகள் என்பவற்றை அளவீடு செய்யும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அபிவிருத்தி என்ற பெயரில் இவ்வாறு அளவீடு செய்து விவசாயம் செய்யவுள்ளனர் என்று தெரிவித்தாலும், மறுபக்கத்தில் இது குடியேற்றத்திட்டத்துக்கான செயற்பாடாக இருக்கக் கூடுமோ? என்ற கேள்வியையும் மக்கள் எழுப்பியுள்ளனர். (ற-19)

## மக்கள் நலன் வேண்டி விசேட பூஜை வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 17

கொரோனாத் தாக்கத்திலிருந்து நாட்டு மக்கள் மீள இறை ஆசி வேண்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டு பட்டாணி ஆதி வைரவர் எருமேனி தர்ம சாஸ்தா மகா சன்னிதானத்தில் விசேட பூசை வழிபாடுகள் நாளை இடம்பெறவுள்ளன. வழிபாடுகளின் நிறைவில் சன்னிதானத்தின் பிரதம குருக்கள் அருள்ஜோதி சிவஸ்ரீ ஸகந்த சாம்பசிவ ஜெகதீஸ்வரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. (வ-இ)

## பழைய மாணவர் சங்க நிர்வாகத் தெரிவு

வவுனியா, மார்ச் 17

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்தின் பழைய மாணவர் சங்க நிர்வாகத்தெரிவு நேற்று இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் ஆ.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பழைய கூட்டஅறிக்கை மற்றும் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நிர்வாக சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது. (ச-110)



வவுனியாவில்

## மருத்துவ சான்றிதழ் வழங்கத் தாமதம் முறைப்பாட்டையடுத்து நடவடிக்கை

வவுனியா மாவட்டச் செயலகத்தில் உள்ள தேசிய போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் இயங்கும் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான மருத்துவ பரிசோதனை மற்றும் மருத்துவ சான்றிதழ் வழங்கும் நிலையத்துக்கு உரிய நேரத்தில் மருத்துவர் வருவதில்லை. இதனால் அங்கு சேவை நாடிச் செல்வோர் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது என மக்கள் குற்றஞ் சாடியுள்ளனர். இது தொடர்பில் மாவட்ட அபிவிவிருத்திக் குழுத் தலைவரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதையடுத்து மருத்துவ சான்றிதழ் வழங்கும் நிலையத்துக்கு அபிவிருத்திக் குழுத்தலைவர் நேற்றுமுன்தினம் 11 மணியளவில் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். அதுவரை நேரமும் மருத்துவர் அங்கு வராத நிலையில் ஊழியர்களிடம் அது தொடர்பில் கேட்டறிந்ததுடன் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களையும் கேட்டறிந்தார். இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வந்து உரிய முறையில் திணைக்களம் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இதன்போது மக்களுக்கு உறுதியளித்தார். (வ-18)

கழிவுப் பொருள் சேகரிக்கும்

## 20 பேருக்கு 25 லட்சம் பெறுமதியான கருவிகள்

சாவகச்சேரி, மார்ச் 17

சாவகச்சேரி நகரசபையுடன் வேள்ட் விஷன் லங்கா நிறுவனம், பின்லா நிறுவனம் மற்றும் செவனத்நிறுவனம் ஆகியவை இணைந்து மேற்கொண்டு வரும் உக்காத கழிவுப்பொருள்களை மீள் சுழற்சிக்காக சேகரிக்கும் வேலைத் திட்டத்தில், கழிவுப் பொருள்கள் சேகரிக்கும் 20 பேருக்கு 25 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் நேற்றுமுன்தினம் நகரசபை பொன்விழா மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, சபை எல்லைக்குட்பட்ட மிகவும் பொருண்மியம நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இவ்வாறு பயிற்சி பெற்ற 20 பேருக்குமென மூன்று சில்லு சைக்கிள் 4, ஆண்களுக்கான சைக்கிள் 4, கழிவுப்பொருள்கள் ஏற்றக்கூடிய பெட்டியுடனான சைக்கிள் 6, கடதாசி வெட்டும் இயந்திரம் 3, தராசு 20, சுட்டியல் 20, ஜம்போ பைகள் 40, கழிவுகள் சேகரிக்கும் பைகள் ஆயிரத்து 200 மற்றும் கூடாரம் 10 என்பவை பகிர்ந்தளிக்கப்பட்டன.

நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் கலந்து கொண்டார்.

இந்தத் திட்டத்தில் சாவகச்சேரி நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கழிவுகள் சேகரிப்பு நிலையத்துக்கு தினமும் பெருமளவான கழிவுப் பொருள்கள் அங்கத்தவர்களால் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

ஒரு லட்சம் பேருக்கான வேலைத்திட்டத்தில்

## 95 பேருக்கு இன்று நேர்முகத் தேர்வு!

சாவகச்சேரி, மார்ச் 17

ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ், தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் கீழ் விண்ணப்பித்தோரில் 95 பேருக்கான நேர்முகத் தேர்வு இன்று முற்பகல் 9 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தத் திட்டத்தில் வேலை வாய்ப்புக் கோரி விண்ணப்பித்த 3 ஆயிரத்து 334 பேரில், தகைமையுள்ள ஆயிரத்து 214 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் கடந்த ஜனவரி மாதம் ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டு தற்போது பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன. ஏனையோரில் 95 பேருக்கு இன்று நேர்முகத் தேர்வு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் முன்மொழிவுகள் அனுப்பிவைப்பு

சாவகச்சேரி, மார்ச் 17

நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான முன் மொழிவுகள் அந்தந்த பிரதேச செயலகங்களின் உறுதிப்படுத்தலுக்காக மாவட்டச் செயலகத்தால் அனுப்பப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சாவகச்சேரி தொகுதியில் மேற்கொள்ளவுள்ள ஏழு லட்சத்து 85 ஆயிரம். ரூபாவுக்கான 10 அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் உறுதிப்படுத்தலுக்காக பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த பிரதேசத்துக்கானவை என பிரதேச செயலரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அபிவிருத்திக்கு அனுமதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# சர்வதேச நீதி கோரிய பேரணிக்கு ரெலோ இளைஞரணியும் ஆதரவு

சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவில் இருந்து நல்லூர் பின் வீதி வரை இன்று நடைபெறவுள்ள பேரணிக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் இளைஞர் அணி முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;


இறுதிப் போரில் நடைபெற்ற இனப் படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்கு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் பரிகார நீதி கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லை என்பதை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் பெப்ரவரி மாத அறிக்கை தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளது. அத்துடன் சர்வதேச நீதிப் பொறிமுறைகளின் ஊடாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதையும் ஆணையாளர் உறுதிபடக் கூறியுள்ளார். இதன் பிற்பாடு பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு உறுதியாக ஒரே நிலைப்பாட்டில் உள்ளது என்பதை தெளிவுபடுத்த இப்படியான ஜனநாயகப் போராட்டங்கள் அவசியமானதுடன், அவற்றை அனைத்து தரப்பினரும் ஆதரித்து நீதி வேண்டிய குரலை ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும். இந்த நிலைப்பாட்டில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் உறுதியாக பல முனைகளிலும் பணியாற்றி வருவதுடன், இனத்துக்கான நீதி பலவீனமடைவதை எந்த வகையிலும் அனு மதிக்கப் போவதில்லை. அந்தவகையில் நடைபெறவுள்ள பேரணிக்கும் இளைஞர் அணி தமது முழுமையான ஆதரவை வழங்குவதுடன் தமிழ்த் தேசிய சக்திகள் அனைத்தையும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றது -என்றுள்ளது. (ப)

# அடிப்படை வசதிகளின்றி உடையார்கட்டு சந்தை

## வர்த்தகர்கள் சுட்டிக்காட்டு

**புதுக்குடியிருப்பு, மார்ச் 17**

**புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் இயங்கும் உடையார்கட்டு சந்தை எதுவித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படாத நிலையில் இயங்கி வருகிறது என வணிகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**



அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த மூன்று ஆண்டுகளாக சந்தை வளாகத்தில் உள்ள கிணற்றுக்கு மோட்டார் பொருத்தித் தருமாறு கோரிக்கை விடுத்தும் இது வரை அது செய்து தரப்படவில்லை. வெற்றிலைக் கடைக் காரர்களுக்கு சரியான இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை மழை காலங்களில் சந்தை வெள்ளம் நிரம்பிக் காணப்படுகிறது. மலசல கூடத்துக்கு முறையான தண்ணீர் வசதி இல்லை. வரியை அறவிடும் பிரதேச சபையினர் இவற்றைக் கருத்தில்கொண்டுஉரியசேவையை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர்களான ஆ.ஜேன்சன்,சாந்தி ஆகியோர் சந்தையின் நிலை தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டு வியாபாரிகளிடம் கேட்டறிந்தனர். இதுகுறித்து கருத்து தெரிவித்த பிரதேச சபை உறுப்பினர் ஆ. ஜேன்சன், பிரதேச சபையாலும் சந்தையைக் குத்தகைக்கு எடுத்தவராலும் வரி அறவிடப்படுகின்றது. ஆனால் வியாபாரிகளுக்கு எந்த விதமான சேவையும் ஒழுங்காகச் செய்யப்படவில்லை. அதிகளவான வியாபாரங்கள் சந்தைக்கு வெளியில் நடைபெறுவதால் வியாபாரிகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பில் சபையின் கவனத்துக்கு கொண்டு செல்வோம் - என்றார். (வ-19)



## மன்.பிரதேச செயலகத்தால் மகளிர் தின நிகழ்வுகள்

**மன்னார், மார்ச் 17**

மன்னார் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் 'நாடும் தேசமும் உலகமும் அவளே' எனும் தொனிப்பொருளில் சாதனை படைத்த பெண்களை கௌரவிக்கும் மகளிர் தின நிகழ்வும் , மன்னார் மாவட்டத்தின் முதல் பெண் மாவட்டச் செயலர் திருமதி.ஏஸ்ரான்லி டிமெல்லை வரவேற்கும் நிகழ்வும் மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப் தலைமையில் நேற்றுமுன் தினம் பிற்பகல் 2.30 மணியளவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதேச ரீதியில் சிறந்த பெண் முயற்சி யாளர்களை கௌரவிக்கும் முகமாக சிறந்த வீராங்கனை, சிறந்த பெண் முயற்சியாளர்கள் பிரதேச ரீதியாக தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கான விருதுகள் மற்றும் பரிசில்கள் என்பவை வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (ச-56)



## ஸீரோ அக்சிடென்ட் விழிப்பூட்டல் திட்டம்

**மன்னார், மார்ச் 17**

ஸீரோ அக்சிடென்ட் எனும் தொனிப்பொருளில் விசேடநடமாடும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டம் மன்னார் நகர் மத்திய பகுதியில் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் ஏற்பாட்டில் வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வீதி விபத்துக்களைக் குறைக்கும் நோக்கத்துடன் போக்குவரத்து பயணங்களின் போது தரமான தலைக்கவசங்களை அணிவதன் முக்கியத்துவம் தொடர்பாக இதன்போது பொது மக்களுக்கு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது. (வ-56,213)



## புத்தூரில் 200 பயனாளிகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள்

**கொடிகாமம், மார்ச் 17**

நிலாவரை புத்தூர் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கு அத்தியாவசியப் பொருள்களான நுளம்பு வலை, போர்வை, சாரம், துவாய் மற்றும் தலையணை போன்றவை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கனடாவில் வசிக்கும் நிலாவரையைச் சேர்ந்த சு. ராம்ஜி, மற்றும் சு. தனு என்போரின் நிதி அனுசரணையில் இவை வழங்கப்பட்டுள்ளன. "எம் உறவுகளை நாமே பாதுகாப்போம்" என்ற திட்டத்தின் கீழ் இடம் பெற்ற இந் நிகழ்வில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர் மா.கலையமுதன் மற்றும் லவ்லி கிறீம் கவுஸ் முகாமையாளர்களான லோசன், புவிராஜ் ஆகியோர் கலந்துகொண்டு பொருள்களை வழங்கினர். (வ-159)

## பிரதேச செயலாளர் நியமனம்

**மன்னார், மார்ச் 17**

மன்னார் மடு பிரதேச செயலகத்துக்கு புதிய பிரதேச செயலாளராக கீதபொன்கலன் நிஜாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மடு பிரதேச செயலாளராக கடமையாற்றிய பி.ஜெயகரன் கடந்த வருடம் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தார். இதனையடுத்து உதவிப் பிரதேச செயலாளர் திருமதி வினோஜிதா பொறுப்பில் இயங்கி வந்த மடுப் பிரதேச செயலகத்துக்கு தற்போது புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-213)



## வவுனியா சிறைச்சாலை வீதி கொங்கிறீட் வீதியாக மாற்றம்

**வவுனியா, மார்ச் 17**

வவுனியா - சிறைச்சாலை வீதி கொங்கிறீட் வீதியாக மாற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்காக திறந்து விடப்பட் டுள்ளது. வவுனியா கண்டி வீதி , நீதிமன்றத்துக்கு அருகே காணப்படும் சிறைச்சாலைக்குச் செல்லும் குறித்த வீதி ஏ9 வீதியில் ஆரம்பமாகி சந்தை சுற்றுவட்ட வீதியுடன் சென்று முடிவடைகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நகரசபை உறுப்பினர் ரி.கே. இராஜலிங்கத்துக்கு குறித்தொதுக்கப்பட்ட வருடாந்த 12லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 120 மீற்றர் நீளமான கொங்கிறீட் வீதியாக இது மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-110)



ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 26 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் எதிர்கால இலக்குகளுக்கான தயார்படுத்தல் பயிற்சி வழங்கும் நிகழ்வு ஆகியவை சம்மேளனத் தலைவி தனுஷியாவின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதற்கான நிதி அனுசரணையை ராணி அறக்கட்டளை (இலண்டன்) நிறுவனம் வழங்கியிருந்தது. (வ-159)

## மயங்கி விழுந்த மூதாட்டி சாவு!

**சாவகச்சேரி, மார்ச் 17**

வரணி தாவளை இயற்றாலைப் பகுதியில் தேநீர் கேட்டு விட்டு கதிரையில் அமர்ந்திருந்த மூதாட்டி ஒருவர் மயங்கி விழுந்த நிலையில், சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி (வயது-67) என்பவரே உயிரிழந்துள்ளார். தற்போது மூதாட்டியின் சடலம் சாவகச்சேரி மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ற-9)

# சீனி மோசடி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்




**கொழும்பு, மார்ச் 17**

**வரி வருமானத்தில் 15 பில்லியனுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்திய சீனி மோசடி தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி தொடர்பான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பான விசாரணைகளுக்காக குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்றும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, இந்த விடயம் தொடர்பில் விசேட கணக்காய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்று கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

சீனிக்கான இறக்குமதி வரிக் குறைப்பின் மூலம் அரசுக்கு ஆயிரத்து 595 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டது என்று தெரிவித்து கொழும்பு அரசியல்வாதிகள் போர்க்கொடி தூக்கியிருந்தனர்.

அதற்கான விசாரணைகளை முன்னெடுக்குமாறும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# 30 ஆயிரம் பணியாளர்கள் இலங்கை திரும்பியுள்ளனர்

*தொழில்துறை அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 17

வெளிநாடுகளில் நிர்க்கதியாகியிருந்த சுமார் 30 ஆயிரம் இலங்கைப் பணியாளர்கள் இதுவரை நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர் என்று தொழில்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வெளிநாடுகளில் நிர்க்கதியான நிலையில் இருக்கும் மேலும் 20 ஆயிரம் பேர் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர். வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புவோரை தனிமைப்படுத்துவதற்கான, போதிய இடவசதிகள் இன்மை காரணமாக, அந்தச் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக, சகல மாவட்டங்களிலும் தலா ஒவ்வொரு விருந்தகமும், தங்குமிட விடுதியையும் அமைக்குமாறு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது -என்றார். (ப)



## போதைப்பொருளுடன் இருவர் கைது

கொழும்பு, மார்ச் 17

ஒரு கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகத்தால் கொழும்பு டாம் வீதி பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ப)

# ஐ.தே.க. வின் தேவை ஏற்படும்போது ரணில் நாடாளுமன்று செல்வாராம்

கொழும்பு, மார்ச் 17

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தேவையான நேரத்துக்கு நாடாளுமன்றத்துக்குச் செல்வார் என எதிர்பார்க்கின்றோம். அவர் மறுத்துவிட்டால் பிரதித் தலைவர் செல்வார் என அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

நாடாளுமன்றம் செல்ல கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் ஆணை கிடைக்கவில்லை. தேசியப்பட்டியல் மூலம் ஒரு ஆசனம் கிடைத்திருக்கின்றது. தற்போதைய சூழ்நிலையில் கிடைத்திருக்கும் தேசியப் பட்டியலில் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்றே கட்சியின் செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டு, அது தொடர்பில் அவருக்கு அறிவித்திருக்கின்றோம். அதனால் தேவையான நேரம் வரும்போது அவர் நாடாளுமன்றத்துக்குச் செல்வார் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது.

என்றாலும் தலைவர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்துக்கு செல்வதற்கு மறுத்தால் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன செல்வார்.

அதற்கான அனுமதியை கட்சியின் அதிகாரசபை வழங்கி இருக்கின்றது. கிராம மட்டத்தில் மக்களுடனான சந்திப்புக்களின் போது ஐக்கிய தேசிய கட்சியின் தேவையை தற்போது அவர்கள் உணர்ந்து வருகின்றதை எம்மால் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

அதேபோன்று நாடாளுமன்றத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேவை ஏற்படும்போது, அந்த நேரத்தில் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி எமது உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்துக்குச் செல்ல நடவடிக்கை எடுப்போம். -என்றார். (ப)

# கள்ள நோட்டுக்கள் மீட்பு

*மூவர் கைது*



கொழும்பு, மார்ச் 17

7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி கொண்ட கள்ள நோட்டுக்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய அக்கரைப்பற்று பொலிஸாரால் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதானவர்கள் நிந்தவூர் பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கி இருந்து இவ்வாறான சட்டவிரோத செயலில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர்கள் தங்கிய வீட்டில் இருந்து பிரிண்டர் மற்றும் கணனி உள்ளிட்ட 5 ஆயிரம் ரூபா பணம் அச்சிடும் தாள்கள் மற்றும் அச்சிடப்பட்ட பணம் என்பவை மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களில் ஒருவர் கடந்த 6 மாதங்களுக்கு முன்னரும் கள்ளநோட்டுக்களை அச்சடித்து விநியோகித்த குற்றச்சாட்டில் கைதாகி விடுதலையானவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# சஹ்ரானின் சகோதரி உட்பட 64 பேருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 17

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி உட்பட 64 பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

காணொலி மூலம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.சி.ஏ றிஸ்வான் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தபோதே அவர்களை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சஹ்ரான் குழுவோடு தொடர்புடைய குற்றச்சாட்டிலும் அம்பாந்தோட்டை, நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காகச் சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலும் காத்தான்குடியைச் சேர்ந்த 63 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் 58 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப் பட்டிருந்தனர்.

அதன்படி சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், சியோன் தேவாலய தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட ஆசாத்தின் தாயார் மற்றும் குண்டுதாரிக்கு பெருந்தில் ஆசனப் பதிவு செய்த சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட 6 பேர் உட்பட 64 பேரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ப)

## வாசுதேவ-அனுஷா பேச்சு



கொழும்பு, மார்ச் 17

நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் பத்தரமுல்லையில் இடம்பெற்றது.

இதன்போது அமைச்சர், மலையக மக்கள் எதிர்நோக்கும் குடிதண்ணீர்ப் பிரச்சினை மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு அமைச்சின் மூலம் விரைவான தீர்வுத்திட்டங்களை வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

மேலும், உயர்தரம் மற்றும் மேற்படிப்புகளை மேற்கொண்டு தொழில் இன்மை காரணமாக மிகப் பெரிய சவால்களை எதிர்கொண்டு வரும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. (ற-20)


# உலகின் சிறந்த வர்த்தக நாமமாக 'மேட் இன் சிறிலங்கா' மாற்றமடையும்

*பிரதமர் மஹிந்த நம்பிக்கை*

'மேட் இன் சிறிலங்கா' உலகின் சிறந்த வர்த்தக நாமமாக உலகுக்கு எடுத்துச் செல்வதற்கு, ஒரு நாடு என்ற ரீதியில் நாம் கை கோர்ப்போம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வாகன உற்பத்தி, வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்திக்கான நிலையான செயற்பாட்டு முறைமை வெளியீடு கொழும்பு ஷங்கிரிலா ஹொட்டலில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்;

கொவிட் உடன் வந்த பொருளாதாரத் தாக்கத்தைக் குறைக்க வாகன இறக்குமதியை நிறுத்தினோம். எவரையும் துன்புறுத்தும் நோக்கத்துடன் இதனைச் செய்யவில்லை. அதேவேளை சுமார் இரண்டு ஆண்டுகளுக்குத் தேவைப்படும் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் நாட்டில் காணப்பட்டன. குறிப்பாக உலகளாவிய தொற்றுநோய் ஏற்பட்ட இத்தருணத்திலேயே உள்ளூர் பொருளாதாரத்தின் முக்கியத்துவம் நன்கு புரிந்துள்ளது. அதுமாத்திரமன்றி, நமது பொருளாதார அமைப்பின் குறைபாடுகளை ஈடுசெய்யவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாகும். ஒரு அமைப்பை மாற்ற முயற்சிக்கும்போது, பல்வேறு தடைகள் வரும். சிலர் அதை விரும்புகிறார்கள். சிலர் அதை விரும்பவில்லை. அனைவரின் அர்ப்பணிப்புடன் ஒரு வளமான நாட்டைக் கட்டியெழுப்பும் திறனும் நம்பிக்கை யும் எங்களிடம் உள்ளது. 'மேட் இன் சிறிலங்கா' உலகின் சிறந்த வர்த்தக நாமமாக உலகுக்கு எடுத்துச் செல்வதற்கு ஒரு நாடு என்ற ரீதியில் நாம் கைகோர்த்துக் கொள்வோம் -என்றார். (ப)



## மக்கள் தரிசிப்புக்காக விநாயகர் சிலை பிரதிஷ்டை

மானிப்பாய், மார்ச் 17

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் பழமை வாய்ந்த விநாயகர் சிலை ஒன்று ஐந்து வருடங்களுக்குப் பின்னர், மீண்டும் ஆலய வளாகத்தில் மக்கள் தரிசிப்பதற்கு வசதியாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் ஆலய மூலஸ்தானத்தில் இருந்த இந்த விநாயகர் சிலையே நேற்றுமுன்தினம் ஆலய வளாகத்தின் முன்புறமாக வைக்கப்பட்டது. ஆலய பெறுநர் குழுவினர், அடியார்கள் எனப் பலரும் இதன்போது கலந்துகொண்டனர். (ஐ-115)

# துன்பங்களை வெளிக்கொணர பேரணியில் இன்று அணிதிரள்க

### இந்து சமயப் பேரவை அழைப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 17**

**தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டு முழு உலகமுமே கொதித்தெழுகின்றபோது எமது மக்கள் தமக்கேற்பட்ட துன்பத்தை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி வெளிக்கொணர்வது இன்றைய சூழ்நிலையில் எமது மக்களின் தலையாய கடமையாகிறது. ஆகையால் இன்று நடைபெறும் பேரணியில் மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் என்று யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் அழைப்பு விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

அந்நியர் இந்த நாட்டுக்கு வரமுன் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இந்த நாட்டை ஆண்டார்கள். அந்நியர் இந்த நாட்டை ஆளும் போது நிர்வாகத்தைச் சுலபமாக்குவதற்காக தமிழர் ஆண்ட பகுதியையும் சிங்களவர் ஆண்ட பகுதியையும் இணைத்தார்கள். அப்படியே அவர்கள் இந்த நாட்டிலிருந்து வெளியேறுகிற போதும் இணைந்தபடியே எம்மவரிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறினார்கள். ஜனநாயக நாட்டில் நாம் சிறுபான்மையினரால் நாம் ஆளப்படும் இனமாகிவிட்டோம். இதனால் நாம் படும் துன்பங்களுக்கு அளவே கிடையாது போய்விட்டது.

இலங்கையில் ஜனநாயகம் தோற்றதற்கான தார்மிகப் பொறுப்பையும் சிங்களத் தலைவர்களே ஏற்றாக வேண்டும். எது எப்படியிருப்பினும் எமது உணர்வுகளை வெளிப்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்துவோம்- என்றுள்ளது. (ப)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம் பிற்போடல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் குழுக் கூட்டம் காலவரையறை இன்றிப் பிற்போடப்பட்டுள்ளது. இந்தக் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெற இருந்தது. இந் நிலையில் அண்மைக் காலங்களில் சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் கீழ் உள்ள பிரதேசங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என சங்கத்தின் செயலாளர் ம.திருவரங்கன் அறிவித்துள்ளார். (வ-இ)

## வரவேற்பு நிகழ்வு

கொடிகாமம், மார்ச் 17


பளை இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 1 மாணவர்களை வகுப்பில் இணைத்துக் கொள்ளும் வரவேற்பு நிகழ்வு இன்று புதன்கிழமை அதிபர் க.ஞானசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ச-159)

## முல்லைத்தீவில் வெடிபொருள்கள் மீட்பு!

முல்லைத்தீவு, மார்ச் 17

முல்லைத்தீவு வீதியோரமாக ஒரு தொகுதி வெடிபொருள்கள் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன. விமானப் படையினரின் தகவலுக்கு அமைய, நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இதன்போது, ஆர்.பி.ஜி.வகையான குண்டுகள் 6, 60 எம். எம். எறிகணை குண்டுகள் 4, கைக்குண்டுகள் 4 உள்ளிட்ட வெடிபொருள்களே மீட்கப்பட்டுள்ளன.

இவை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், முல்லைத்தீவுப் பொலிஸார் குறித்த வெடிபொருள்களை நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளனர் என முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-19)





முல்லைத்தீவு புத்துவெட்டுவான் பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் நோக்கில் ஜனநாயக இளைஞர் அமைப்பினர் நேற்றுமுன்தினம் களப் பயணத்தை மேற்கொண்டனர். இதன்போது புத்துவெட்டுவான் கிராமத்தில் உள்ள மருதன் குளத்தின் சீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (ஐ-13)

## பொருண்மியம் நலிந்த குடும்பத்துக்கு உதவி

யாழ்ப்பாணம், மார்ச் 17

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி 1 மாவட்ட பிராந்தியத் தலைவர், காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகத்துக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டார்.

இதன்போது பொருண்மியம் நலிந்த குடும்பத்துக்கு உலருணவுப் பொருள்களும் பணமும் வழங்கப்பட்டன. (வ-9)

## அரசுக்கு சேறுபூசுவதற்கே சீனி மோசடி குற்றச்சாட்டு

### சாகர காரியவசம் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

எவ்வித அடிப்படையும் இன்றி, முற்றிலும் பொய்யான வகையில் அரசுக்கு எதிராக சீனி மோசடி குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;


இலங்கையில் சீனியின் விலை அதிகரித்துச் சென்றதால், நுகர்வோருக்கு சலுகை வழங்க அரசு தீர்மானித்தது. அதற்கமைய சீனிக்கான வரியை 50 ரூபாவிலிருந்து 25 சதவீதமாகக் குறைத்தோம். இது மக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட வரிக் குறைப்பு. இதனால், சீனி இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் சிலருக்கு இலாபம் கிடைத்தது. ஆனால், கொடுக்கல், வாங்கல்களில் சிலர் மட்டுமே இலாபம் ஈட்டும் வகையில், கடந்த அரசு வரியைக் குறைத்து, பின்னர் ஒரு வாரத்தில் வரியை அதிகரித்தது. எமது அரசு அப்படிச் செய்யவில்லை. இன்றும் 25 சதவீத வரியே அறவிடப்படுகின்றது. அரசாங்கம் முன்னெடுக்கும் அபிவிருத்திச் செயற்பாடுகளைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாமல், எதிர்க்கட்சியினரும் மக்கள் விடு தலை முன்னணியின ரும் அரசுக்கு எதிராகச் சேறுபூசும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்- என்றார். (ப)

## சிவலிங்கம் பிரதிஷ்டை

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தின் விஸ்வமடு தொட்டியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் இருக்கும் நாகலிங்க மரத்தின் கீழ் கடந்த சிவராத்திரி தினத்தன்று சிவலிங்கம் ஒன்று உருத்திரசேனை அமைப்பினரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இப்பகுதியில் சிவன் ஆலயம் இல்லாத நிலையில் இந்தப் பகுதி மக்கள் இந்த லிங்கத்தை வழிபட்டு வருகின்றனர். (ச-12)





புலம்பெயர் தேசத்தில் வசித்து வந்த அமரர் சபாபதிப்பிள்ளை. சற்குணராஜாவின் 18ஆவது ஆண்டு நினைவாக தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில் அவரது குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு கிராமத்திலுள்ள வயோதிபர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பவை வழங்கப்பட்டன. (ச-222)

## இன்றைய நாள்

**மேடம்:** அனுபவ அறிவு கூடுதலாகும். அங்கீகாரம் கிடைக்கும். உறவில் ஏற்பட்ட விரிசல் உங்கள் முயற்சியால் மறையும். பேச்சில் அறிவாற்றல் வெளிப்பட்டு பாராட்டு வரும்.

**இடபம்:** உங்கள் குடும்பத்தினர் அதிக செல்லம் கொடுப்பார்கள். வீட்டு வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். தனிமை காரணமாக இருந்து வந்த வெறுப்புத் தீரும்.

**மிதுனம்:** குழந்தைகளின் பக்குவமான செயலால் மகிழ்ச்சி ஏற்படும். பிள்ளைகளின் ஆரோக்கியம் பற்றிய சங்கடம் குறையும். மனம் போனபடி நடப்போரின் நட்பை விலக்கவும்.

**கடகம்:** குடும்பத்துக்குச் சொந்தமான மனையை மீண்டும் அடைவீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கும். கலையார்வம் அதிகரிக்கும். அலுவலகத்தில் நீங்கள் பயந்த தொல்லைகள் ஏற்படாது.

**சிம்மம்:** வேலை தேடுவோருக்கு நல்ல வாய்ப்புகள் கூடிவரும். செயல் ஒன்றில் உறவினர் பக்கபலமாக இருந்து உதவுவார்கள். மனச்சாட்சி இடிக்கும் செயலைச் செய்ய வேண்டாம்.

**கன்னி:** சட்டவிரோத செயல் செய்யும் நபரிடமிருந்து விலகுங்கள். கடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் எச்சரிக்கையாக இருங்கள். மற்றவருக்காக கையெழுத்திடுவதை தவிர்த்திடுங்கள்.

**துலாம்:** பெற்றோர், உடன்பிறந்தோருடன் உறவு சுமுகமாக இருக்கும். சிலருக்கு திருமணம் கை கூடும். தந்தையின் அன்பு கிடைக்கும். பணியிடத்தில் உங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பீர்கள்.

**விருச்சிகம்:** உயர் கல்வி பற்றி அனுபவசாலியின் ஆலோசனை பெறுவீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். குடும்பத் தலைமுறை வளரும். குடும்பத்தினர் மீது பாசம் கொள்வீர்கள்.

**தனுசு:** அழகுணர்ச்சி அதிகரிக்கும். தடை நீங்கி நன்மைகள் உண்டாகும். ஆசிரியர்களுக்கு மதிப்பு உயரும். பண வரவு பற்றிய முயற்சி கூடும். சிறு சங்கடம் ஏற்பட்டு விலகும்.

**மகரம்:** குழந்தைகளிடையே உங்களின் முக்கியத்துவம் அதிகரிக்கும். சுறுசுறுப்பாக செயற்பட்டுப் பணிகளை முடிப்பீர்கள். எதிரிகளால் இருந்து வந்த பிரச்சினை இப்போது தீரும்.

**கும்பம்:** அலுவலகத்தில் உங்களுக்கு திடீரென்று செல்வாக்குக் கூடும். தம்பதிகளுக்குள் இருந்து வந்த மனக்கசப்புகள் அனைத்தும் தீரும். ஆதாயம் பெறுவீர்கள். பெண்கள் கவனமாக செயற்படுங்கள்.

**மீனம்:** எதிர்பாராத உதவி கிடைக்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. ஆரோக்கியமும், வெற்றியும் உண்டு. புறக்கணித்தவர் மதிப்பர். செயல், பேச்சு போன்றவற்றில் நிதானம் தேவை.

## தவக்கால சிந்தனை

### கண்ணானது கண்தானம்

பார்வையற்ற ஒருவர் "ஆண்டவரே நான் மீண்டும் பார்வை பெற வேண்டும்"என்றார். இயேசு அவரிடம் 'உம் நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று" என்றார்.

இறைய சூழலில் சிறியோர் முதல் பெரியோர்வரை மூக்குக் கண்ணாடிகளை சுமப்போர் தொகை அதிகரித்து வருகிறது. தொலைக்காட்சி, சுற்றுச்சூழல் மாசு, கைபேசி, கணினிப் பாவனை போன்றவற்றால் கண்கள் காலாவதியாகிவிடும் ஆபத்தில் மனித குலம் அகப்பட்டுள்ளது. நாமும் இறைவனை நோக்கி "நான் மீண்டும் பார்வைபெற வேண்டும்"என்று கூக்குரலிட வேண்டிய கட்டாயத்துக்குள் காலடி எடுத்து வைத்துவிட்டோம்.

சுற்றுச் சூழலை நாம் மாசுபடுத்திக் கொண்டிருந்தால் இறைவன்எமக்காய்படைத்தஇயற்கை எழிலை ரசிக்க முடியாது போய் விடும். பார்வை இழந்தவர் பார்வைபெற எவரெல்லாம் கண்தானம் செய்கின்றனரோ அவரெல்லாம் மறு கிறிஸ்துக்களே.

**எஸ்.யேசுதாஸ்,**
கொழும்புத்துறை.



# பிரேசிலில் இருந்து எழும் அபாய ஒலி



**கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்காக பிரேசிலில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரும் சவச்சாலைகளில் ஒன்று.**

■ வடகோவை சிவநேசராசன்

கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து உலகம் மெல்லமெல்ல விடுவிக்கப்பட்டு வருகின்ற போதிலும் பிரேசிலில் இருந்து வரும் செய்திகள் ஆரோக்கியம் மிக்கவையாக இல்லை. பிரேசிலை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தத் தென்னமெரிக்கக் கண்டத்தையும் முழு உலகையும் மீண்டும் ஒரு பின்னடைவுக்குள் தள்ளிவிடும் அபாய ஒலியை பிரேசில் அன்றாடம் எழுப்பிக் கொண்டிருக்கின்றது.

ஆரம்பத்தில் இருந்தே கொரோனாவுக்கு எதிராக காத்திரமான நகர்வுகளை பிரேசில் மேற்கொள்ளவில்லை. இன்னும் சொல்லப்போனால் கொரோனாவை ஒரு பெருந்தொற்றாகவே பிரேசில் கண்டுகொள்ளவில்லை. மெத்தனப்போக்கையே இந்த விடயத்தில் கைக்கொண்டது. இதன் விளைவாக அதிக பாதிப்புக்களை எதிர்கொண்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவுக்கு அடுத்த படியாக உள்ளது பிரேசில்.



தற்போது உச்சக்கட்டமாக திரிபடைந்த மற்றுமொரு கொரோனா பிரேசிலில் பரவுவது அவதானிக்கப்பட்டுள்ளது. மனிதர்களில் இருந்து மனிதர்களுக்கு இலகுவாகவும் இலாவகமாகவும் தொற்றும் தன்மை இந்த திரிபடைந்த கொரோனாவுக்கு உள்ளது என்கின்றனர் வல்லுநர்கள். மொத்தத்தில் பிரிட்டன், தென்கொரியா, தென்னாபிரிக்கா ஆகிய இடங்களில் அவதானிக்கப்பட்ட திரிபடைந்த வைரஸ்களுடன் கூடுதலாக இந்த வைரஸும் வந்து சேர்ந்துள்ளது.

இங்கு பாதிப்பு மட்டுமல்ல. கொரோனா இறப்புக்களும் பிரேசிலில் அதிகம். ஒவ்வொரு நாளும் சராசரியாக ஆயிரத்து 500 முதல் 2ஆயிரம் பேர் வரையில் கொரோனாவால் பிரேசிலில் மடிந்து கொண்டிருக்கின்றனர். அமெரிக்காவிலும் கிட்டத்தட்ட இதே நிலைதான் என்றபோதிலும் அமெரிக்கா எடுத்துவரும் தற்காப்பு நடவடிக்கைகளில் பாதிகூட பிரேசிலில் இல்லை.

பிரேசில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள அரச, தனியார் மருத்துவமனைகளின் அறிக்கைகளின் படி புதிய வகை கொரோனா வைரஸ் ஆழ ஊடுருவியுள்ளது என்று பிரேசில் நாட்டின் தேசிய சுகாதார செயலணி தெரிவித்துள்ளது. அத்துடன் ஏற்கனவே கொரோனா வைரஸ் தொற்றால் பீடிக்கப்பட்டு குணமடைந்தவர்களுக்கு மீண்டும் புதிய கொரோனா வைரஸ் பரவியுள்ளமையுடம் பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதே சமயம் அமெரிக்க நோய் தடுப்பு நிலைய இயக்குநர் வலென்ஸ்கி, "இந்த புதிய கொரோனா வைரஸ் தொடர்பாக மக்கள் இனியாவது விழிப்பாக இருக்க வேண்டும்" என்று மன்றாட்டமாகக் கேட்டுள்ளார். பிரேசிலின் கொவிட் ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், "கடந்த ஜூன் மாதத்தில் நான் கொரோனா வைரஸால் பீடிக்கப்பட்டு முற்றாக குணமடைந்த நிலையில் மீண்டும் எனக்கு நவம்பர் மாதத்தில் புதிய கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது" - என்றார்.

ஆக, பிரேசில் இனியாவது கொவிட் பரம்பலுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தவறின் புதிய வகை கொரோனா ஏற்கனவே சிதிலமடைந்திருக்கும் பிரேசிலை இன்னும் உருக்குலைக்கும் என்பது திண்ணம்.

புர்கா விவகாரம்:

## இலங்கையின் முடிவை ஆதரிக்காத பாகிஸ்தான்

கொழும்பு, மார்ச் 17

இலங்கையில் நிகாப் மற்றும் புர்கா தடைசெய்யப்படுவதானது, உலகெங்கிலும் உள்ள சாதாரண இலங்கை முஸ்லிம்கள் மற்றும் அவர்களின் உணர்வுகளுக்கு காயத்தை ஏற்படுத்தும் என இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதுவர் சாத் கட்டக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் டுவிற்றல் பக்கத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இலங்கையில் நிகாப் மீதான தடை உலகெங்கிலும் உள்ள சாதாரண இலங்கை முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம்களின் உணர்வுகளுக்கு காயத்தை ஏற்படுத்தும். பாதுகாப்பு என்ற பெயரில் இத்தகைய பிளவுபடுத்தும் நடவடிக்கைகள், பொருளாதார சிக்கல்களை அதிகரிப்பதுடன், அடிப்படை மனித உரிமைகள் குறித்த பரந்த அச்சங்களை மேலும் வலுப்படுத்த மட்டுமே உதவும் - என்றார். (ப-22)

## உணவு கிடைக்காததாலேயே இலங்கைப் பெண் இறந்தார்

ஜப்பான் ஊடகங்கள் தகவல்

கொழும்பு, மார்ச் 17

ஜப்பானில் நகோயா நகரிலுள்ள தடுப்பு முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருந்த 33 வயதான இலங்கைப் பெண்ணொருவர் உயிரிழந்தமைக்கு அவர் உணவு உண்ணாமல் இருந்தமையே காரணம் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் 7 மாதகாலமாக முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த குறித்த பெண் கடந்த 6 ஆம் திகதி இவ்வாறு உயிரிழந்துள்ளார். முகாமில் தடுத்து வைக்கப்பட்டதால் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக அவர் உணவு உண்பதைத் தவிர்த்து வந்துள்ள நிலையில், தன்னை விடுவிக்குமாறு குடிவரவு அதிகாரிகளிடம் கோரிக்கைகளை முன்வைத்திருந்த போதிலும், அவர்கள் அதனை நிராகரித்துள்ளனர் என்று இப்பெண் எழுதிவைத்திருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கான விசாவின் மூலம் ஜப்பானுக்குச் சென்ற இப் பெண், விசா காலாவதியான பின்னரும் அந்த நாட்டில் தங்கியிருந்தார். கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் கைது செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து, குடிவரவு முகாம் ஒன்றுக்கு அனுப்பப்பட்ட அவருக்கு எவ்வித வசதிகளும் கிடைக்கவில்லை என்று அந்தப் பெண்ணே முறைப்பாடு செய்துள்ளார். அதனால் உடல் நலிவுற்று இரண்டு தடவைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் பெண் தனக்கு உதவிகோரி எழுதிய சித்திரங்க ளுடனான குறிப்பு ஒன்றை அசாஹி ஷிம்புன் என்ற ஜப்பான் பத்திரிகை வெளியிட்டுள்ளது. அவ்வாறான குறிப்பு ஒன்றில், தற்போது தனக்கான முதன்மைத் தேவையாக இருப்பது உணவு மாத்திரமே எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

## பொலிஸ் அதிகாரியாக பாசாங்கு செய்தவர் கைது

உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் சீருடையை அணிந்து பொலிஸ் அதிகாரியைப்போல போலியாகத் தன்னை அடையாளப்படுத்திய நபர் ஒருவர் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பன்னிப்பிட்டிய - பொல்வத்தை பிரதேசத்தில் மேல் மாகாண தெற்கு விசேட குற்ற விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் இறக்குவானை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதானவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தேகநபர் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் சீருடையை அணிந்து பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ப)

# நயவஞ்சகப் போக்குடையவரே தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்

முன்னணியின் தேசிய அமைப்பாளர் குற்றச்சாட்டு



**கொழும்பு, மார்ச் 17**

**பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நயவஞ்சகப் போக்கைக் கடைப்பிடித்துள்ளார் எனதமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவா கூட்டத்தொடரில் சில நாடுகளால் வரைவு ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தெரிவாகினர். அந்த வகையில் இவர்கள் சொல்வதைத்தான் உலகம் ஏற்கும். தற்போது அந்த வரைபுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் உடன்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் ஒரு பச்சைத் துரோகத்தையும் நயவஞ்சகத்தையும் கூட்டமைப்பின் தலைவர் செய்துள்ளார். தமிழ் மக்களாகிய நாங்கள் இனிமேலும் விழிக்காதுவிட்டால் எங்கள் மக்களைக் காப்பாற்றுவது கேள்விக்குறியாகி விடும். இனியாவது தமிழ்ச் சமூகம் விளங்கிக்கொள்ள வேண்டும். உண்மையான தலைவராகவும் நேர்மையான தலைவராகவும் யார் உள்ளார் என்பதை நாம் அறிய வேண்டும்.

இறுதிப் போரின் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை குழிதோண்டி புதைக்கும் விதமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கை இருந்தது. இதனால்தான் 2010ஆம் ஆண்டளவில் அதில் இருந்து விலகி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் தமிழ்த் தேசிய அரசியலை தக்கவைத்து வந்துள்ளோம் - என்றார். (ப-20)

## அம்பாறையில் 6 ஏக்கர் நிலத்தில் கஞ்சா தோட்டம்

அம்பாறை, மார்ச் 17

அம்பாறை-பக்மிடியாவ பகுதியில் 6 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சாச் செய்கை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கீழ் உள்ள இலங்கை இராணுவத்தின் முதலாவது கொமாண்டோ படைப்பிரிவினர் நேற்று முன்தினம் முன்னெடுத்த சோதனையின்போதே கஞ்சாத் தோட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கஞ்சாச் செய்கை குறித்துக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய பொலிஸாருடன் இணைந்து இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று இராணுவம் தெரிவித்துள்ளது. (ப)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்த உதவுங்கள்

மேன்முறையீடு செய்தது பொ-பொ பேரெழுச்சிப் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 17

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் வரைவில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் (ஐ.சி.சி) பாரப்படுத்த வேண்டிய விடயத்தையும் உள்ளடக்குவதற்கு உதவுமாறு கோரி பிரேசிலுக்கு, 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி' வரை மக்கள் பேரெழுச்சிப் பேரணி இயக்கம் மேன்முறையீடு செய்துள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில விடயங்கள் வருமாறு:

பிரேசிலானது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயிர்ப்பான ஓர் உறுப்பு நாடாக விளங்குவதுடன் உலகின் அதிகாரம்மிக்க நாடுகளில் ஒன்றாகவும் இருப்பதால் ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி, மொன்ரினேக்றோ மற்றும் வட மசிடோனியா ஆகிய நாடுகளால் இணைந்து சமர்ப்பிக்கப்பட்ட 2021ஆம் ஆண்டு மாசி மாதம் 19ஆம் திகதியிடப்பட்ட 'பூச்சிய வரைவு' என அழைக்கப்படுகின்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டியமையை உள்ளடக்குவதற்கு உதவுமாறு கோருகின்ற மேன்முறையீட்டின் பொருட்டு இதனை நாம் வரைகிறோம்.

இந்த நாடுகள் இந்தத் தீர்மானத்தை வரைந்தபோது பாதிக்கப்பட்டோரை கலந்தாலோசிக்கக் கூடவில்லை என்பதுடன் அவை தன்னிச்சையாக வரையப்பட்ட இப் பூச்சிய வரைவு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்க முன்னர் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட இணைந்த மேன்முறையீடுகளையும் புறக்கணித்துள்ளன.

பிரேசிலானது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஓர் உறுப்பு நாடாக இருப்பதால் பூச்சிய வரைவு தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐசிசி) பாரப்படுத்த வேண்டியமையை உள்ளடக்குவதற்குப் பரிந்துரை செய்வதற்கான சகல உரிமைகளையும் தாங்கள் கொண்டுள்ளீர்கள்.

பாதிக்கப்பட்டோராகவும் பாதிக்கப்பட்டோரின் பிரதிநிகளாகவும் பூச்சிய வரைவு தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டியமையை உள்ளடக்குவதற்கு உதவுமாறு மேன்முறையீடு செய்கிறோம்.

இந்தப் பூச்சிய வரைவு தீர்மானமானது இலங்கை பாதுகாப்புப் படையினரால் புரியப்பட்ட, தமிழ் மக்களை கொத்துக் கொத்தாகக் குன்று குவித்தமை மற்றும் தமிழ்ப் பெண்களைப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கியமை ஆகியவை அடங்கலான கொடூரமான குற்றங்களால் பாதிக்கப்பட்டோரின் அடிப்படை எதிர்பார்ப்புக்களையேனும் பூர்த்தி செய்யவில்லை.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தாமல் விடுதலானது, கொடூரமான குற்றங்களைப் புரிந்தோர் நீதியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழிகோலுவதுடன் மாத்திரமல்லாது, அது இலங்கையின் அரசியல் தலைவர்களும் பாதுகாப்புப்படைப் பிரதானிகளும் தாம் நீதிக்கு முகங்கொடுக்கத் தேவையில்லை என்பதை நன்கறிந்து கொண்டு, எதுவிதத் தயக்கமும் இல்லாமல் தமிழ் மக்களுக்கு எதிரான சர்வதேச குற்றங்களைப் புரிவதற்கான துணிச்சலையும் ஏற்படுத்திவிடும்.

எனவே இலங்கையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தாமல் விடப்படின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளவல்ல இந்த அபாயத்தைத் தீவிரமாகக் கவனத்தில் கொள்ளுமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகளுக்கான நான்கு முன்னாள் உயர் ஆணையாளர்கள், ஒன்பது சுயாதீன ஐ.நா. நிபுணர்கள் மற்றும் இலங்கை சம்பந்தமான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வல்லுநர்கள் குழுவின் சகல உறுப்பினர்களும் அடங்கலாக இருபது முன்னாள் ஐ.நா. அதிகாரிகள் 'போர் விதைகளை விதைத்தல்' எனத் தலைப்பிடப்பட்டு கடந்த 18ஆம் திகதி வழங்கிய தமது அறிக்கையில் இலங்கையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளனர் - என்றுள்ளது. (கு-இ)

# ஒருமித்த நாட்டுக்குள் தமிழருக்கும் நீதி; ஐக்கிய மக்கள் சக்தியாலேயே சாத்தியம்

## அதன் தலைவர் சஜித் உறுதி

**கொழும்பு, மார்ச் 17**

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் போரால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருமித்த இலங்கைக்குள் அவர்களுக்கான நீதியை உறுதிசெய்வது அவசியமாகும். அதன்மூலம் தேசிய பாதுகாப்பும் நாட்டின் சுயாதீனத்தன்மையும் உறுதிப்படுத்தப்படும். சிறுபான்மையின மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அனைவரும் ஒன்றிணைந்து வாழக்கூடிய நாடொன்றைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் ஜனநாயகக் கட்டமைப்பில் ஐக்கிய மக்கள் சக்தி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கட்சியாக விளங்குகின்றது. புதிதாகக் கட்சியை ஸ்தாபித்து ஒரு வருடகாலத்துக்குள்ளேயே நாடாளுமன்றத் தேர்தலுக்கு முகங்கொடுத்துடன் முதற்தடவையிலேயே அதிகளவான ஆசனங்களை வெற்றி பெறவும் முடிந்தது. இதேபோன்று மீண்டுமொரு மிகப்பெரும் வெற்றியை வெகுவிரைவில் அடைந்துகொள்ளும் நோக்குடனேயே பயணித்துக்கொண்டிருக்கின்றோம். தற்போது கொரோனா வைரஸ் பரவலைக் தொடர்ந்து நாடு பல்வேறு விதத்திலும் வீழ்ச்சி கண்டுள்ளது. நாட்டின் பொருளாதாரமும் அபிவிருத்தியும் வீழ்ச்சியடைந்திருப்பதுடன் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதிலும் முறையான செயற்திட்டமொன்று பின்பற்றப்பட வில்லை. இந்நிலையில் நாட்டுமக்களை முன்நிறுத்தி, அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய போராட்டத்தை முன்னெடுப்பதற்கான தலைமைத்துவத்தை இன்னும் சில நாள்களில் வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம். மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கு எமது உயிரைத் தியாகம் செய்வதற்குக்கூடத் தயாராக இருக்கின்றோம். நாட்டின் தற்போதைய அரசின் வாக்குறுதிகளாலும் செயற்பாடுகளாலும் இளைஞர் சமுதாயம் பெரிதும் ஏமாற்றமடைந்திருக்கின்றது. எமது நாட்டில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். நாங்கள் பௌத்த தர்மத்தைப் பின்பற்றி செயற்படுகின்றோம். எனினும் பௌத்த தர்மத்தில் எந்தவொரு



இடத்திலும் ஏனைய இன, மதங்களை அழிக்குமாறு கூறப்படவில்லை. நாம் ஒருபோதும் சிங்கள பௌத்தத்துக்கு துரோகமிழைக்க மாட்டோம். அதே வேளை பௌத்த தர்மத்தின் உள்ளடக்கத்தைத் தவறாக அர்த்தப்படுத்தி, அதன்மூலம் அடிப்படைவாத மற்றும் இனவாத செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் ஒருபோதும் அனுமதியளிக்க முடியாது - என்றார். (ப)

# ராஜபக்ச அரசை வீட்டுக்கு ஓட ஓட விரட்டியடிப்போம்

## 2025இல் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி; சஜித் அணியின் மாநாட்டில் சூளுரை

கொழும்பு, மார்ச் 17

“ராஜபக்ச அரசை வீட்டுக்கு ஓட ஓட விரட்டியடிப்போம். எமது பக்கம் பலமானதொரு அணி இருக்கின்றது. 2025ஆம் ஆண்டளவில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி அமையும்.” இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது மாநாட்டில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சூளுரைத்தார். மேலும், முத்தையா முரளிதரன் இலங்கை அணிக்காக விளையாடியபோது அவரது பந்துவீச்சைப் பார்த்து மகிழ்ந்தோம்; பாராட்டினோம். ஆனால், இன்று ராஜபக்சக்களுக்கு சோரம்போகும் விதத்தில் அவர் பந்து வீசுகின்றார். முரளிக்கு 2 ஏக்கர் காணியை அரசு வழங்கியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து தற்போது ஒருவருடம் பூர்த்தியடையவுள்ளது. எனினும் நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர் ஒருவரை அனுப்பிவைக்க முடியாத நிலையில் ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார். அவ்வாறிருந்துகொண்டு மீண்டும் நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன் எனக் கூறுகின்றார். தற்போது ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் பெரமுனவின் கொள்கைகளை விடவும் எமது கொள்கைகள் மாறுபட்டவையாகும். நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதே எமது கொள்கையாகும். எதிர்காலத்தில் அந்தப் பயணத்தை முன்னெடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (ப-22)

# போலிச் செய்திகள் பரப்புவதில் சஜித் பிரேமதாச வல்லவர்

## அமைச்சர் சி.பீ.ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

போலிச் செய்திகளை சமூகமயப்படுத்துவதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கைதேர்ந்தவர். இவ்வாறு அமைச்சர் சி.பீ.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித் போன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலும் கள்ளன். ரணிலும் பொய் கூறுவதில் சிறந்தவர். வாக்குகளைப் பெறுவதே அவர்களின் நோக்கம். வாக்குகளைப் பெற்ற பின்னர் அவர்கள் இந்தப் பகுதிக்கு வருவதில்லை. யானை, யானை என்றார்கள்; அதில் எந்த புண்ணியமும் இல்லை. தற்போது தொலைபேசி அதிலும் புண்ணியமில்லை. தற்போது தொலைபேசியில் மின் சேமிப்பு இல்லை. அது செயலிழந்துள்ளது. இப்போது அது வேலை செய்வதில்லை.

நாம் மக்களின் பொறுப்பை ஏற்றது போல் செயற்படுகின்றோம். ஆகவே இரண்டு கால் யானையையும் நாம் விரட்டியுள்ளோம். எமது ஆட்சியில் யானை - மனித மோதலுக்கு தீர்வு வழங்கப்படும் - என்றார். (ற-இ)

# மகிந்தவுக்கு ஏற்பட்ட நிலையை 2024 இல் கோத்தாவும் சந்திப்பார்

## ராஜித எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு 2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட கதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு 2024 ஆம் ஆண்டில் ஏற்படும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவது என்பது ராஜபக்சக்களுக்கு வெறுமனே பகல் கனவாகவே அமையும். தற்போதைய பலவீனமான அரசை வீழ்த்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைய வேண்டியது அவசியமாகும். கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடம் பூர்த்தியடைந்துள்ள நிலையில் நாட்டு மக்களுக்கு எவ்வித நலன்களும் கிடைக்கப் பெறவில்லை. அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்த நல்லாட்சி அரசின் உறுப்பினர்கள் தேசத்துரோகிகளாகவும், அத்தியாவசிய பொருள்



களின் விலைகளை ராஜபக்ச குடும்பத்தின் உறவினர்களுக்கு மாத்திரம் குறைக்கும் அரச உறுப்பினர்கள் தேசப்பற்றாளர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். நாட்டின் பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் நிலையே தோற்றம் பெறும். நாட்டுமக்களுக்கு மாத்திரமன்றி, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கும் இந்த அரசு துரோகமிழைத்துள்ளது. ஜனாதிபதி இனவாதத்தை முன்னிறுத்தியே அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்கிறார். நாட்டு மக்கள் அனைவரையும் இணைத்துக் கொண்டு, அரசுக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் - என்றார். (ப)

# மீன் தொட்டிக்குள் வீழ்ந்த குழந்தை பரிதாபச் சாவு

கொழும்பு, மார்ச் 17

கல்கிரியாகம – ஆடியாகல பிரதேசத்தில் வீடொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மீன் தொட்டிக்குள் வீழ்ந்து குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. ஒரு வயதுடைய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் இடம்பெற்ற வேளையில் வீட்டில் அனைவரும் இருந்துள்ளதுடன், வீட்டாரின் கவனயீனத்தால் இந்த விபத்து நேர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக கல்கிரியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப)

# சொந்த பிரச்சினைகளை மக்களிடம் கூறி குமுறும் ஜனாதிபதி

## இலங்கையில் இந்த நிலை என்கிறார் ஹரீன் எம்.பி

கொழும்பு, மார்ச் 17

நாட்டை பாதுகாக்கின்றேன் எனக் கூறி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய ஜனாதிபதியிடமிருந்து தற்போது நாட்டைப் பாதுகாக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிய வேண்டிய ஜனாதிபதி ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று, தனது பிரச்சினைகளை மக்களிடம் கூறுகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி அதன் கொள்கைகளுக்கு முரணாக செயற்பட்டதால் நாட்டு மக்கள் அதனைப் புறக்கணித்தார்கள். அதன் விளைவாகவே நாங்கள் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் சக்தியை ஸ்தாபித்தோம். எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய தேசிய ரீதியான தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும். தற்போதைய அரசின் தன்மையும் இவ்வாறானதாகக் காணப்படுகிறது. செல்வந்தர்களுக்கு சார்பாகவே அரசு செயற்படுகிறது. நடுத்தர மக்கள் குறித்து அரசு அக்கறை காண்பிப்பதாகத் தெரியவில்லை. பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளும் பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளன. இந்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துக்கொண்டு செயற்படுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் - என்றார். (ப)

# சம்பள அதிகரிப்பு வர்த்தமானியை நீக்குமாறு 20 கம்பனிகள் வழக்கு

## முறியடிப்போம் என்கிறது அரசு

**கொழும்பு, மார்ச் 17**

**தோட்டத் தொழிலார்களின் நாளாந்த அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபா என்பதை உறுதிப் படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானியை நீக்கக் கோரி பெருந்தோட்டக் கம்பனிகள் வழக்குத் தாக்கல் செய்துள்ளன.**

வழக்கில் தோற்றால் நாடாளுமன்றத்தில் சட்டவரைவைக் கொண்டு வந்து அதனைநிறைவேற்றிஆயிரம்ரூபாவை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்தச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என சம்பள நிர்ணய சபை வலியுறுத்தியதற்கு அமைய கடந்த 9 ஆம் திகதி இரவு தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவின் கையொப்பத்தில் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இதனை அடுத்து பெருந்தோட்டக்கம்பனிகள் ஆரம்பத்தில் இதற்கான எந்தவித மறுப்பையும் தெரிவிக்காதபோதிலும், தற்போது வர்த்தமானி அறிவிப்பை நீக்கக்கோரி 20 பெருந்தோட்டக் கம்பனிகளும் வழக்குத் தாக்கல் செய்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு பெருந்தோட்டக் கம்பனிகளின் சார்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

"சற்றும் எதிர்பாராத விதமாக பெருந்தோட்டக் கம்பனிகள் இவ்வாறான நடவடிக்கையை எடுத்துள்ளன.

நீண்டகாலமாக பேச்சுக்களை முன்னெடுத்தும் கூட, சம்பள நிர்ணய சபையில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டும் கூட இப்போது கம்பனிகள் இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

பெருந்தோட்டக் கம்பனிகள் தொடுத்துள்ள வழக்கை வெற்றிகொள்ள அரசு முயற்சிக்கும்.

இயலாது போனால் அடுத்ததாக நாடாளுமன்றத்தில் சட்டவரைபு ஒன்றைக் கொண்டுவந்து ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை நாளாந்தச் சம்பளமாக வழங்கக்கோரிசட்டத்தைநிறை வேற்றி தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவோம்" என்று பெருந்தோட்டக் கம்பனிகளின் இந்தச் செயற்பாடு குறித்து தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார். (ப)






# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

## நாகலிங்கம் முருகையா

### (பீற்றூட் முருகையா - பருத்திக்கலட்டி சுன்னாகம்)



ஈழ வள நாட்டின் வடபால் இலங்கிடும் யாழ் நகரின் அருகே... ஓங்கி வளர்ந்திடும் பனை, தென்னைகளும், பச்சை பசேலென்ற வயல் வெளிகளையும், மீனினங்கள் துள்ளி விளையாடும் நீர் வளங்களையும்,கல்வியியலாளர்கள், கச்சிதமான வர்த்தகர்கள் -என பல்துறை பரிணாம வளர்ச்சியுடன் பலரும் மெச்சிட விளங்கும் ஊராம் சுன்னாகம் அதனில் பிறந்து என்கரம் பற்றி பிள்ளைகள் மூவரை பெற்றெடுத்து.."வானத்து சூரியன் போல்".. என் வாழ்க்கைக்கு ஒளி கொடுத்த என் தெய்வமே.. காலங்கள் கடந்து வருடங்கள் பத்தாகி விட்டாலும்.. "பேபி" என்று என்னை நீங்கள் அழைக்கும் சத்தம்.. இன்னும் என் காதில் ஒலித்து கொண்டேயிருக்கிறது.. ஒரு நிமிடம் கூட என்னை விட்டு அகலாத நீங்கள்.. இவ்வளவு நெடுந்தூரம் என்னை விட்டு.. பிரிந்து சென்றது இறைவனின் சதியா?.. இல்லை இது தான் உங்கள் விதியா?.. வருடங்கள் பத்தாகி விட்டதோ!.. நம்ப முடியவில்லை.. நான் முதன் முதலில் நேசித்த உறவு நீங்கள் அப்பா.. அன்புக்கு இலக்கணமான.. என் முதல் ஆசானும்.. நீங்கள் தான் அப்பா..பக்குவம் அடையாத வயதினில் நான் சமைத்த உணவை.. பக்குவமாய் எண்ணி ருசித்து உண்ட அப்பா நீங்கள்.. இன்று பலவிதமாய் சமைக்கின்றேன்.. ருசித்து உண்பதற்கு நீங்கள் இல்லை அப்பா..அக்காவோடு, அண்ணன், தம்பி - என்று.. எம் மூவரிற்கும் இந்த உலகை காட்டிய.. அதிசய புத்தகம் அப்பா நீங்கள்.. உங்கள் பொக்கிஷமான.. அன்பின் பக்கங்களை.. அன்று நம்மால் உணர முடியவில்லை-அப்பா.. எத்தனை கஷ்டங்கள், துயரங்கள்.. கடந்த பிறகும்.. ஒன்றுமே தெரியாதது போல் காட்டி கொண்டு.. குடும்பத்தின் மத்தியில் சிரித்தபடி.. பிள்ளைகள் எமக்கு ஒழுக்கத்தோடு கூடிய கல்வியையும், விளையாட்டையும் தந்து.. நம்பிக்கையூட்டி வழிகாட்டிய.. உங்களுக்கு நிகராக.. இவ்வுலகில் வேறேதும் இல்லை அப்பா...

**துளைக்கும் ஞாபகங்கள்**

"என்னை மட்டும் துளைக்கட்டும்" என்று
உங்கள் மார்பின் கீழ் என்னை அணைத்தும்
நான் மகிச்சியாக தூங்க குழந்தை என்னை
பல மைல் கடந்து சைக்கிளில் ஏற்றி வந்து
பக்குவமாய் தூங்க வைத்து.. என்னை காத்து ஆளாக்க..
- எத்தனை கஸ்டங்களை சுமந்தீங்களே அப்பா..
- இன்று நான் சகல வசதிகளுடனும் இருக்கும் போது
உங்களை குழந்தையாய் பாத்துக்கொள்ள
நீங்கள் இல்லையே அப்பா...
ஒரு கோடி நினைவுகளை..
உள்ளத்தில் சுமந்து துடிக்கின்றேன்..
எனக்காய் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கையை..
தினம் எண்ணி தவிக்கின்றேன்..
உங்கள் பிரிவின் வலி என் உச்சம் தொட கதறி அழும்..
என் மனதை கண்டு..
கண்கள் இரண்டும்.. கண்ணீர் வடிக்கிறது அப்பா..
என் விழி அசைவில்
என் தேவை உணர்ந்து நிறைவேற்றும்..
உங்களை போல் எனக்கு யாருண்டு அப்பா..

நான் விரும்பாததை ஒரு போதும்..
எனக்கு புகுத்தியது இல்லை..
என் விருப்பத்தை நீங்கள்..
வெறுத்ததும் இல்லையே ..
மலையளவு துன்பத்தை கூட..
திணையளவும் பொருட் ப்படுத்தாத" ஜீவன்" அப்பா நீங்கள்..
உங்களை தெய்வத்திற்கு ஈடாக
பார்க்க முடியுமா என்று கேட்டால்..
இல்லை என்றே சொல்வேன் - ஏனென்றால்..
பக்தி இருந்தால் மட்டுமே கிடைக்கும்... தெய்வத்தின்
- "வரம் "கூட
எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல்..
எங்களை காத்த நீங்கள்..
எமக்கு வரம் அல்லவா..?..
அப்பா நீங்கள் எம்மை விட்டு பிரிந்து..
வருடங்கள் கடந்தாலும்..
நீங்களும் உங்கள் நினைவுகளும்..
எங்கள் இதயத்தில்
வாழ்ந்து கொண்டே இருக்கும் அப்பா ..

தோற்றம் 15.05.1940
மறைவு 07.04.2011

**மனைவி, பிள்ளைகள்.**

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### அசாத்சாலி....

நேற்று இரவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கொள்ளுப்பிட்டியில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

அசாத் சாலி கடந்த 10ஆம் திகதி வெளியிட்டார் என்று கூறப்படும் கருத்தின் ஊடாகத் தண்டனைச் சட்டக் கோவை, பயங்கரவாதத் தடைச் சட்டம், அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான சட்டங்களின் கீழ் அவர் குற்றமிழைத்துள்ளார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு சட்டமா அதிபர் நேற்றுப் பிற்பகல் அறிவித்திருந்தார்.

முஸ்லிம் ஷரிஆ சட்டம் மற்றும் நாட்டின் பொதுச் சட்டம் என்பன தொடர்பில் அவர் முன்வைத்த கருத்துக்களே சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன. இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. (எ-22)

### நாயாறில்...

மாலை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

அளம்பில், தங்கபுரத்தைச் சேர்ந்த இராசன் மோகன் (வயது-26) என்பவரே உயிரிழந்துள்ளார். கோபால் புஸ்பராசா (வயது-56) என்பவரே காயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாயில் இருந்து அளம்பில் நோக்கி மோட்டார் சைக்கிளில் இவர்கள் பயணித்தபோது, கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் நாயாறு பாலத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் சிக்கிய இருவரும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். மற்றையவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-19)

### உருத்திரபுரீச்சரமும்...

பொருள் அகழ்வாராய்ச்சி எனும் பெயரில் பௌத்தமயமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தமிழ் மக்கள் குற்றஞ்சாட்டிவரும் நிலையில், சிவாலயத்தில் அகழ்வாராய்ச்சி முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளது தொல்பொருள் திணைக்களம்.

இந்த ஆலயத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் நடைபெறும் என்று கூறப்படுகின்றது. இந்தக் கோயிலுக்கு அண்மையில் பௌத்த சின்னங்கள் உள்ளன என்று தெரிவித்தே தொல்பொருள் திணைக்களம் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது.

குருந்தூர் மலை மற்றும் வெடுக்குநாறி மலை ஆகிய இடங்களிலும் தமிழ் மக்களின் வழிபாட்டு இடங்கள் தொல்பொருள் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது கிளிநொச்சி உருத்திரபுரீச்சரம் சிவாலயத்திலும் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ-6)

# ரணிலுக்கு 'ஐ லவ் யூ' எங்களுக்கு வீரவசனமா?

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கிண்டல்



**கொழும்பு, மார்ச் 17**

**கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசில் ரணிலுக்கு ஐ லவ் யூ சொன்னவர்கள் தற்போது வீரவசனம் பேசுகின்றார்கள். இவ்வாறு ரணிலுக்கு ஐ லவ் யூ சொல்லியதால் பயனெதுவுமே கிட்டவில்லை என இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

காணி விடயம், வன இலாகா தொல் பொருள் மற்றும் மகாவலி பிரச்சினை ஆகியவை புதிதாக வந்த பிரச்சினைகள் அல்ல. இவையே தொடர்ச்சியாக உள்ளவை.

கடந்த காலங்களிலே இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக களத்தில் இறங்கி போராடியவர்களில் நானும் ஒருவன். கடந்த அரசின் காலத்திலே சம்பந்தன் ஐயாவின் தலைமையிலே பதினாறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் பாதுகாத்தோம். பாதுகாப்பென்றால் அப்படியொரு பாதுகாப்பு. வரவு செலவுத் திட்டத்தில் பல முறை பாதுகாத்தோம். பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தில் பாதுகாத்தோம்.

இவ்வாறு கடுமையாக பாதுகாத்தோம். ஆனால் அதற்குப் பிரதிபலனாக, பல்லுக் குத்துவதற்கு ஈக்குக் கூட எமது மக்களுக்குக் கிடைக்கவில்லை.

எமது தலைவர்களின் கோரிக்கைக்கு அமைய கடந்த அரசுக்கு ஆதரவாக வாக்களித்து விட்டு, ரணில் சேர் குட்மோர்னிங் சேர், ஹாய் சேர், ஹவ் ஆர் யூ சேர், ஐ லவ் யூ சேர், என்று சொல்லிவிட்டு ஏதாவது கேட்பதும், அவர் நிச்சயமாக செய்துதருவேன் என்பதுமாகவே காலம் கடத்தப்பட்டது. வேறொன்றும் நடக்கவில்லை.

இவ்வாறு ரணிலுக்கு ஐ லவ் யூ சொன்னவர்கள் தற்போது வீரவசனம் பேசுகின்றார்கள்.

வாழைச்சேனை காகித தொழில்சாலையை திறந்து தாருங்கள் என்று வாய்கிழிய கத்தினோம் தொழிற்சாலையின் யன்னலைக்கூட திறக்க அவர்களில் எவராலும் முடியவில்லை என்றார். (ப)

# இல்மனைற் அகழ்வுக்கு இடமளிக்கக் கூடாது

## ஜனநாயக இளைஞர் அமைப்பு வலியுறுத்து

அம்பாறை, மார்ச் 17



அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் தனியார் நிறுவனம் ஒன்றால் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள இல்மனைற் அகழ்வு தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என ஜனநாயக இளைஞர் அமைப்பின் பொதுச்செயலாளர் கோபாலபிள்ளை மிதுஜன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் அகழ்வுக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்ட போது பிரதேச மக்களால் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையடுத்து அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அகழ்வுக்கான முயற்சி மீண்டும் தீவிரமாக இடம்பெறுகின்றது. திருக்கோவில் பிரதேசம் ஏற்கனவே கடலரிப்பால் வேகமாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. இங்கு இல்மனைற் அகழ்வு இடம்பெற்றால் கடலோரப்பகுதிகள் கடலுக்குள் மூழ்கும் நிலை ஏற்படும். எனவே அரசியல் லாபம் தேடாது அனைவரும் ஒன்றிணைந்து இதனைத் தடுக்க முன்வர வேண்டும் - என்றார். (வ-13)

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 11 . 1944



மறைவு 16 . 03 . 2021

### பெரியதம்பி இராசரத்தினம் (J.P)

நவகிரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி இராசரத்தினம் (J.P) நேற்று (16.03.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் பெரியதம்பி மற்றும் சின்னத்தங்கம் பெரியதம்பி ஆகியோரின் அன்பு மகனும், செல்லம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் தம்பித்துரை, செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கனகேஸ்வரியின் பாசமிகு கணவரும், அனுசா தர்மதேவன் (ஜேர்மனி), பிரசன்னா (கனடா) மற்றும் காலஞ்சென்ற றதீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுசன், தர்மிந் மற்றும் ரிசாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2021) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் இராஜவீதி, நவக்கிரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவக்கிரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராஜவீதி, நவக்கிரி, புத்தூர்.**

தகவல்
**மனைவி, பிள்ளைகள்.**
**077 8290738**

## மரண அறிவித்தல்

### கனகசபை சாந்தசோதி



**தோற்றம் 21.09.1950**

**மறைவு 16.03.2021**

சோதி வீதி, தையிட்டியை பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சாந்தசோதி நேற்று (16.03.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை செல்வபூரணம் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் மருமகனும், இந்திராதேவியின் பாசமிகு கணவரும், இசைச்செல்வி (கிராம சேவகர், உடுவில்), இசைப்பிரியா (ஆசிரியர், யாழ் மத்திய கல்லூரி), இசைவேந்தன் (மாணவன், சப்ரகமுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் தந்தையும், சுதாகரன் (கிராமசேவகர்-கரவெட்டி), மணிவண்ணன் (ஆசிரியர்-குருநாகல்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆதிராவின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சோதிமணி, தவசோதி, நவசோதி, சிவசோதி, சண்முகசோதி மற்றும் சிவகுமாரன், ஜெகசோதி (ஆசிரியர் - மல்லாகம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.03.2021 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில் கிழக்கு.**

தகவல்
**குடும்பத்தினர்.**
**077 108 2306**

# உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் மற்றுமொரு பெண்ணும் மயக்கம்



வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும், மற்றுமொரு பெண்சுகாதாரத் தொண்டரும் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
தங்களுக்கான நியமனங்களை வழங்கக்கோரி கடந்த 17 நாள்களாக சுகாதாரத் தொண்டர்கள் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். நேற்றுமுன்தினம் மூன்று பெண் சுகாதாரத் தொண்டர்கள் மயக்கமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று மேலும் ஒரு பெண் சுகாதாரத் தொண்டர் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ-20)



# வவுனியா கச்சேரியில் நேற்று கடும் சோதனை

வவுனியா, மார்ச் 17
வவுனியா மாவட்டச்செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு மாவட்டச்செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வுக்கு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் மற்றும் பலர் விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் விழா இடம்பெறவிருந்த மண்டபத்தில் விசேட அதிரடிப் படையினர் நேற்றுக் கடுமையான சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர். மோப்பநாய் சகிதம் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (வ-110)

# இராணுவ ஆட்சியுடன் உறவாடாதீர்கள்

## அரசிடம் வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்




மன்னார், மார்ச் 17

**மியான்மர் இராணுவ ஜுன்டா ஆட்சியுடன் உறவாட வேண்டாம் என்று அரசை வலியுறுத்தி மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிறாடோ தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டமொன்று மன்னாரில் நேற்று நடைபெற்றது.**

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் போரால் பாதிக்கப்பட்டு அதன் வடுக்களை சுமந்து அடக்குமுறைகளை சந்தித்த சிறுபான்மையின சமூகம் என்ற ரீதியில் இலங்கை ஆட்சியாளுக்கான மனு ஒன்றும் ஊடகங்கள் மூலம் பகிரங்கமாக வாசித்துக் காட்டப்பட்டது.
அதில், ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி உள்ளிட்ட தலைவர்கள் மியான்மரில் வீட் டுக் காவலில் அடைக்கப்பட்டு, அரசுக்கு எதிராக அமைதியான முறையில் போராடியோர் கொல்லப்பட்டுள்ளனர். மியான்மர் நாட்டின் தலைநகரான ரங்கூனில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு நாடு முழுவதும் இணையத் தொடர்புகள் முடக்கப்பட்டுள்ளன. இரண்டாயிரத்துக்கும் அதிகமான போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.
இலங்கை அரசானது மியான்மர் போன்ற இராணுவ ஜுன்டா ஆட்சிக்கு எவ்விதத்திலும் ஆதரவளித்து உறவாடக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-213,56)

# சைக்கிளின் பின்னாலிருந்த பெண் தவறி வீழ்ந்ததில் சாவு!

நாவாந்துறை, மார்ச் 17
நாவாந்துறையைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் சைக்கிளில் அவனது உறவு முறையான பெண் ஒருவரை பஸ்தரிப்பு நிலையத்துக்கு ஏற்றிச் சென்றவேளை, பச்சைப்பள்ளிவாசலுக்கு அருகாமையில் அந்தப் பெண் நிலை தடுமாறி வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
இதனால் இந்த சிறுவனை நேற்று சிறுவர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியிருந்தனர்.
இந்தச் சிறுவன் தரப்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி கனநாதப்பிள்ளை நிசாந்தன், இந்தச் சிறுவனில் எந்தத் தவறும் இல்லையெனவும், குறித்த பெண் ஒருகையில் கைத்தொலைபேசியும், மறுகையில் கைப்பையையும் வைத்துக்கொண்டு சைக்கிள் பின்னிருக்கையில் பிடிக்காது இருந்து பிதுக்காது சென்றதாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளார்.
இதைத் தொடர்ந்து சிறுவர் நீதிமன்ற நீதிவானால் சிறுவனுக்கு பிணை வழங்கப்பட்டது. (ற-319)

# முகவரி தெரியாத நோயாளியை பொறுப்பேற்றல்

யாழ்ப்பாணம்,மார்ச் 17
வீதியில் கடந்த முதலாம் திகதி இருந்து 1990 நோயாளர் காவு வண்டியின் உதவியுடன் தங்கராசா (வயது-80) என்பவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.
இதுவரை அவரை உறவினர்கள் எவரும் பார்வையிட வரவில்லை. எனவே குறித்த நோயாளியை அவர்களது உறவினர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

# இரு போட்டிகளின் இறுதித்திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17
உலக நீர் தினத்தை முன்னிட்டு பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த இளையோர் மத்தியில் நடத்தப்படவுள்ள சுவரொட்டிப் போட்டி மற்றும் வீதி நாடகப் போட்டி ஆகியவற்றுக்குத் தமது ஆக்கங்களை அனுப்பி வைப்பதற்கான இறுதித்திகதி நீடிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணக் கல்வி,பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது.
இதன்படி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியாக
நீடிக்கப்பட்டுள்ளது.போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை edumin.np.gov.lk என்ற இணைய முகவரி ஊடாக பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு 021 222 2203, 021 223 1343 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தவறவிட்ட பணத்தை பெற்றுக்கொள்ளவும்

உடுவில், மார்ச் 17
உடுவில் பிரதேச செயலகத்தில் கடந்த 10 ஆம் திகதி பொதுமகன் ஒருவரால் தவறவிடப்பட்ட ஒருதொகைப் பணம் கண்டுபிடிக்கப்பட்டு பிரதேச செயலக அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த பணத்தைத் தவறவிட்டவர் அலுவலக நேரத்தில் பிரதேச செயலக கணக்காளரிடம் தொடர்புகொண்டு உரிய ஆதாரத்தை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தென்மராட்சியில் 27 பேருக்கு எழுமாற்றுப் பரிசோதனை!

சாவகச்சேரி, மார்ச் 17
சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மேலும் 27 பேருக்கு எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.
இவர்களிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டன.
மிருசுவில் தவசிக்குளத்தைச் சேர்ந்த கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும், கைதடியைச் சேர்ந்த பெண் அலுவலர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவருடன் தொடர்புடைய 27 பேருக்கே பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. (ற-9)



சிவதீட்சை வழங்கும் நிகழ்வு சைவமகாசபையால் ஒழுங்கமைக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன் போது ஏழு வயது நிரம்பிய பெண்குழந்தைகள் சிவக்குழந்தையாக சிவதீட்சை பெற்றனர். (ய-159)

# நிம்மதியாக உறங்க வேண்டுமா? வடகொரியாவைச் சீண்டாதீர்கள்!

## அமெரிக்காவுக்கு கிம் சகோதரி எச்சரிக்கை

**வொஷிங்டன், மார்ச் 17**

**அடுத்த நான்கு வருடங்களுக்கு நிம்மதியாக உறங்க வேண்டுமென்றால் வடகொரியாவை அமெரிக்கா சீண்டாமல் இருப்பது நல்லது என்று வடகொரிய அதிபர் கிம் யோங் உன்னின் சகோதரி கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



தென்கொரியா, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் கடற்படை கூட்டுப் பயிற்சி வரும் நாள்களில் நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து அமெரிக்க அதிகாரிகள் தென் கொரியாவுக்கு வருகை தந்துள்ளனர். இந்த நிலையில் கிம்மின் சகோதரி கிம் யோ ஜாங், அமெரிக்காவுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் தனது குரலைப் பதிவு செய்துள்ளார்.

அந்த ஒலிப்பதிவில், 'நீங்கள் (அமெரிக்கா) அடுத்து வரும் நான்கு வருடங்களில் நிம்மதியாக உறங்க வேண்டும் என்று நினைத்தால் முதல் படியாக எங்கள் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது' என்று கிம் யோ ஜாங் தெரிவித்துள்ளார்.

வடகொரிய அதிபர் கிம்மின் சகோதரி கிம் யோ ஜாங், கிம்முக்கு அடுத்து சக்தி வாய்ந்த நபராக அந்த நாட்டில் அறியப்படுகிறார். அதிபர் கிம்மின் சொந்தத் தங்கையான கிம் யோ ஜாங் அந்த நாட்டின் அதிகாரம் படைத்த அமைப்பான வடகொரியத் தொழிலாளர் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராகவும் முக்கியமான அரசியல் தலைவராகவும் உள்ளார்.

கடந்த இரு வருடங்களின் முன்னர் வடகொரியா தன் பகைமை நாடான தென்கொரியாவுடன் நட்பைப் பேண முன்வந்தது. இந்த விவகாரத்திலும் கிம் ஜோ ஜாங் முன்னின்று பணியாற்றிவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

---

## இந்தியா செல்கிறார் போரிஸ்!



லண்டன், மார்ச் 17

பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் அடுத்த மாதம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் போரிஸ் இந்தியா செல்வதற்குத் திட்டமிட ப்பட்டது. ஆனால் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக இந்தப் பயணத்தைக் கைவிட்டார் போரிஸ். கொரோனாத் தொற்று குறைந்த பின்னர் போரிஸின் இந்தியாவுக்கான பயணம் மீள ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் பின்னணியிலேயே போரிஸ் இந்தியாவுக்குச் செல்கின்றார்.

இங்கிலாந்து தனது வர்த்தக தொடர்புகளை ஆசியபசிபிக் பிராந்தியத்துடன் விரிவுபடுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தப் பின்னணியில் போரிஸின் இந்தியாவுக்கான பயணம் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது. (ம)

## சீனாவில் புழுதிப் புயல்; பீஜிங்கில் பெரும்பாதிப்பு



பீஜிங், மார்ச் 17

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் நேற்றுமுன்தினம் கடும் புழுதிப் புயல் வீசியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத வகையில் அந்தப் புயல் இருந்தது என்கின்றன சீன ஊடகங்கள்.

இந்தப் புழுதிப் புயல் காரணமாக பீஜிங்கில் உள்ள பல கட்டடங்களில் புழுதி படிந்துள்ளது. அவற்றைத் தூய்மைப்படுத்தும் பணி முன்னெடுக்கப்படுகின்றது. அத்துடன் காற்றின் தரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மந்தமான வெளிச்சமே பீஜிங்கில் நிலவு கின்றது. இதனால் சுமார் 400 வான் பறப்புகள் கைவிடப்பட்டுள்ளன. (ம)


## ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, மார்ச் 17

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவின் வடகிழக்கு பகுதியில் மிதமான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் 4.8 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் தலைநகர் டோக்கியாவில் சில வினாடிகள் கட்டிடங்கள் குலுங்கின என்று ஜப்பான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

## வெளவாலில் உருமாறிய பின்னர்தான் கொரோனா மனிதனுக்கு தொற்றியது!

லண்டன், மார்ச் 17



கொரோனாப் பெருந்தொற்று எவ்வாறு மனித சமூகத்துக்குள் ஊடுருவியது என்பது இன்னும் புதிராகவே உள்ள நிலையில், வெளவாலில் இருந்த குறித்த நுண்மி திரிபடைந்த பின்னரே மனிதனுக்குள் தொற்றியது என்று ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றுக்கு எதிராக பல தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொரோனாவைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் முழு உலகையும் சவாலுக்கு உட்படுத்தும் விதமாகவே இந்த விவகாரம் இன்னமும் உள்ளது.

ஆரம்பத்தில் ஒரு வகையான கொரோனாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த போராட்டம் தற்போது மேலும் சிக்கலுக்கு உரியதாகியுள்ளது.

தென்கொரியா, லண்டன், பிரேசில், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் உருமாற்றம் பெற்ற கொரோனா அவதானிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து கொரோனாவின் உருமாற்றத்தை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், அந்த வைரஸ் வெளவாலில் இருந்து உருமாற்றம் பெற்றுத்தான் மனிதனுக்குத் தொற்றியது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த கிளஸ்கோ பல்கலைக் கழகம் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மியான்மர் இராணுவத்தால் 138 பொதுமக்கள் கொலை

நைபிட்டோ, மார்ச் 17

மியான்மர் இராணுவத்தால் 138 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையிட்டுள்ளது. மியான்மரில் ஆங் சான் சூச்சி தலைமையிலான ஆட்சியைக் கலைத்து அந்த நாட்டு இராணுவம், அடுத்த ஓர் ஆண்டுக்கு அவசர நிலையையும் இராணுவ ஆட்சியையும் அறிவித்தது. அத்துடன் சூச்சியும் அவரது கட்சியினரும் முக்கியஸ்தர்களும் சிறைப்பிடிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து இராணுவ ஆட்சிக்கு எதிராக மியான்மரில் பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டங்களில் இராணுவத்தால் துப்பாக்கிச் சூடும் இன்னபல அடக்குமுறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நேற்று முன்தினம் இராணுவத்தால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 42 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து மியான்மர் போராட்டங்களால் இறந்தவர்களின் எண்ணிக்கை 138ஆக அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது ஐக்கிய நாடுகள் சபை. (ம)



# 31 ஆம் நாள் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 16.02.2021 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்த

அமரர் திருமதி
**கருணாதேவி சிவகுருநாதன்**

தோற்றம் 23.12.1942
மறைவு 16.02.2021

அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் 14.03.2021 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 18.03.2021 வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் 15/11 A சங்கிலியன் வீதி, நல்லூர் இல்லத்திலும் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கிலியன் வீதி,
நல்லூர்.

பெறாமக்கள்
021 205 4005



# 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



நிகழும் சார்வரி வருடம் 15.02.2021 திங்கட்கிழமை சிவபதமெய்திய எமது குடும்பத்தலைவர்

அமரர் திரு.சபாபதிப்பிள்ளை
**முருகேசு சபாரத்தினம்**
(உரிமையாளர் சபா றேடர்ஸ்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (17.03.2021) புதன்கிழமை ந.ப 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இல 89, அம்மன் வீதி, தலங்காவல் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்



# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 . 03 . 1947



மறைவு 11 . 04 . 2016

**அருணாசலம் கமலாகரன்**

திதி: வளர்பிறை சதுர்த்தி [17.03.2021]

நிஜமாக நீங்கள் மறைந்து
ஐந்தாண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.

நினைவுகளுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

S.M.கேணியடி,
காரைநகர்.


இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தின் 17ஆவது நாளான நேற்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் போராட்டத்தில் கலந்துகொண்டு தனது ஆதரவைத் தெரித்திருந்தார். (ப-20)




# மரண அறிவித்தல்

மண்ணில் 17 . 07 . 1971



விண்ணில் 10 . 03 . 2021

**சுரேஷ் அரியராஜா**

வவுனியா நெளுக்குளத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுரேஷ் அரியராஜா அவர்கள் 10.03. 2021 புதன்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைகாளி, நாகம்மா அவர்களின் அன்பு பேரனும், காலஞ்சென்ற அரியராஜா, புஷ்பவதி வைகாளி (இலங்கை) அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற அழகரட்ணம் (பெரியப்பா), குணமலர் வைகாளி (பெரியம்மா, அமெரிக்கா) ராஜேஸ்வரி வைகாளி (பெரியம்மா, இந்தியா) ஆகியோரின் அன்புமிகு பெறாமகனும், காலஞ்சென்ற சுபாஷினி, சுதர்ஷினி (இந்தியா) அவர்களின் அன்பு சகோதரனும், எலிசபெத் ஜான் (டென்மார்க்), ஜோயில் ரவீந்திரன் (டென்மார்க்), ஜார்ஜ் செல்வநாயகம் (ஜேர்மனி), ரமேஷ் (லண்டன்), ஸ்ரீரஞ்சினி (அமெரிக்கா), பபி (கனடா), கண்ணன் (இலங்கை), ரகு (நெதர்லாந்து), மற்றும் ரஞ்சன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு உடன்பிறவா சகோதரனும், பாஸ்கரன் (அமெரிக்கா), சிவநேசஅரசன் (கிரி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திலீப்குமார் (இந்தியா), யாழினி (இலங்கை), கோகுல் (அமெரிக்கா), விக்னேஷ் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு அன்பு மாமாவும், வினிஷா (லண்டன்), நிரோஷன் (லண்டன்) அவர்களின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2021) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14, 10ஆம் ஒழுங்கை,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா

தகவல்: குடும்பத்தினர்,
நண்பர்கள்



# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 05 . 1938



மறைவு 16 . 03 . 2021

**கதிரவேலு கணேசதாசன்**

(ஓய்வு நிலை பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, யா/கன்னாதிட்டி)

சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த கதிரவேலு கணேசதாசன் அவர்கள் நேற்று (16.03.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கௌரீஸ்வரியின் அன்புக் கணவரும், அனுஷா (குபால் திணைக்களம்), Dr. செந்துரன் (சுகாதார வைத்திய அதிகாரி, கரவெட்டி), காயத்திரி (USA) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிகிலாதரன் (ஜேர்மனி), Dr. பிறிந்திகா (சுகாதார வைத்திய அதிகாரி, பருத்தித்துறை), சந்திரஹாசன் (USA) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.03.2021) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 728 6100


## கத்தோலிக்கரின் சடலம் ஓட்டமாவடியில் அடக்கம்

மட்டக்களப்பு, மார்ச் 17

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழந்த கத்தோலிக்கப் பெண் ஒருவரின் சடலம் ஓட்டமாவடி, சூடுபத்தினசேனை பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை அடக்கம் செய்யப்பட்டது.

ஜா-எலையைச் சேர்ந்த 60 வயதான குறித்த பெண் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி ஹோமாகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், கடந்த 8ஆம் திகதி உயிரிழந்தார். அவரது உடல் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டுவரும் சூடுபத்தினசேனை பிரதேசத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இது நாட்டின் இன ஐக்கியத்துக்கும், மனிதாபிமானம் மரணித்து விடவில்லை என்பதற்கும் சிறந்த சான்றாக அமைந்திருக்கிறது' என்று நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் தெரிவித்தார். (ஐ-இ)

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் அறிக்கை முழுமையில்லை

### போராட்டத்தைத் தொடர்வோம் என்கிறார் பேராயர்

கொழும்பு, மார்ச் 17

ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்; இந்தத் தாக்குதலை யார் ஏற்பாடு செய்தார்கள், ஆதரித்தார்கள் என்பது தொடர்பில் ஆணைக்குழுவால் கண்டுபிடிக்க முடியவில்லை. தேவாலயங்களில் என் மக்கள் எவ்வாறு துண்டு துண்டாக கிழிக்கப்பட்டார்கள் என்பதை நான் கண்டேன். அரசியல் நலன்களுக்காக உழைக்கும் தலைவர்களை நாங்கள் விரும்பவில்லை. குறித்த அறிக்கை சிறிய தடயங்களை வழங்கியிருந்தாலும், தாக்குதலுக்குப் பின்னால் இருப்பவர்களை அது அடையாளம் காணவில்லை, எனவே அது 'முழுமையற்ற அறிக்கை. இந்த நிலையில், ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும்வரை போராட்டத்தைத் தொடருவோம் - என்றார். (ப)

## பாரம்பரிய பொருள்களின் விற்பனைக் கண்காட்சி!

வவுனியா, மார்ச் 17

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு, பாரம் பரிய உற்பத்திப் பொருள்களின் விற்பனைக் கண்காட்சி நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலக வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது பெண்களால் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு விதமான பாரம்பரியப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (ம-110)

# ௨ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
இராசா
வாமதேவன்

(உரிமையாளர் இராசா டீசல் இன்ஜினியர்ஸ், தர்மகர்த்தா நல்லூர் பண்டாரக்குளம் மருதவள்வு பிள்ளையார் கோவில்)

| தாயின் மடியில் | பிள்ளையார் திருவடியில் |
|---|---|
| 26.07.1943 | 08.04.2019 |

திதி : பங்குனி பூர்வபக்க சதுர்த்தி

இவ்வுலகைப் பிரிந்து ஆண்டுகள் இரண்டு ஆனாலும் எம் உள்ளத்திலும் வாழ்விலும் என்றும் பசுமையாக வாழும் எம் அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய பண்டாரக்குளப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


# இளம் பெண் உயிர் மாய்ப்பு

சாவகச்சேரி, மார்ச் 17

தவறான முடிவெடுத்து 22 வயதுடைய இளம் பெண்ணொருவர் உயிர்மாய்த்துள்ளார். இந்தச் சம்பவம் நுணாவில் வைரவர் கோவிலடிப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-159)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சுவாமிநாதபிள்ளை

(ஓய்வுநிலை விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்)



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் "சிவபூமி" தொல்புரம் சுழிபுரத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுவாமிநாதபிள்ளை 09.03.2021 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை - பெண் நாகம்மாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.03.2021 காலை 9.00 மணியளவில் "சிவபூமி" தொல்புரம் சுழிபுரத்தில் நடைபெற்று. தகனக்கிரியைகள் தொல்புரத்தில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 29.06.1937 மறைவு 09.03.2021

தகவல்:
திரு.திருமதி தர்மலிங்கம் மதிவதனியும் க.பெ.சதாசிவமும் J 381 மீசாலை


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்

இல 12/6, கனகரத்தினம் வீதி. 1ம் ஒழுங்கை . இல 50, 52 கனகரத்தினம் வீதி. வட்டாரம் - 09 வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 09 கனகரத்தினம் வீதி. 1ம் ஒழுங்கையிலுள்ள இல. 12/6 மற்றும் கனகரத்தினம் வீதியி லுள்ள இல: 50, 52 ஆகிய ஆதனங்கள் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் முருகேசு நவராசா என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் மேற்படி - ஆதனங்களை உள்ளடக்கிய உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.பரமேஸ்வரன் அவர்கள் 2017.07.30ம் திகதி அளந்து தயாரித்த 3071/2017ம் இலக்கப்படத்தில் துண்டு 1,2,3 எனச்சுட்டப்பட்ட நில.பர. இலா 10 குளி 13.26 விஸ்தீரணம் கொண்ட ஆதனம் **நவராசா சண்முகராசா. நவராசா இளையராசா. நவராசா யோகராசா** ஆகியவர்கள் தமது பேரனாராகிய சபாபதிப்பிள்ளை முருகேசுவிற்கு சொந்தமாக இருந்தது எனவும். அவர் மூலம் தமது தந்தை யாரான முருகேசு நவராசாவிற்கு சொந்தமாக வந்தடைந்தது என்றும். குறித்த முருகேசு நவராசா இவ்வாதனத்தை ஆண்டு அனுபவித்து பராதீனப்படுத்தாமலும் இறுதி விருப்பு ஆவணம் இன்றியும் தனது வாரிசுகளாக நவராசா சண்முகராசா. நவராசா இளையராசா. நவராசா யோகராசா. நவராசா பத்மராசா. பத்மநாதன் பெண் பத்மலீலா ஆகியோரை விட்டு காலமாகியிருந்தார் என்றும். குறித்த நவராசா பத்மராசா திருமணம் முடிக்காமலும் வாரிசுகளின்றியும் காலமாகியிருந்தார் என்றும். பத்ம நாதன் பெண் பத்மலீலாவிற்கு சீதனம் வழங்கப்பட்டது என்பதனாலும் தேசவழ மைச்சட்டத்திற்கு உட்பட்ட பெண் என்பதனாலும் தனது பெற்றோர் வழி முதுச சொத்துக்களிற்கு உரித்தற்றவர் என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1110/21.02.2020ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந் தார்கள்.

குறித்த ஆதனத்தின் பகுதிகளான கனகரத்தினம் வீதியிலுள்ள இல : 50, 52 ஆகிய ஆதனங் கள் முறையே மேற்படி நில அளவைப்படத்தில் துண்டு 2 நில. பர. இலா 03 குளி 13.75 மற்றும் துண்டு 3 நில.பர.இலா 03 குளி 03.76 விஸ்தீரணம் கொண்ட ஆதனங்களினை பாலகுமாரன் **பெண் ஸ்மித்திரா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1111/21.02.2020, 1112/21.02.2020 ம் இலக்க உறுதி களால் குறித்த **நவராசா சண்முகராசா. நவராசா இளையராசா. நவராசா யோகராசா** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடைய வரானார்.

குறித்த ஆதனத்தின் மற்றைய பகுதியான கனகரத்தினம் வீதி. 1ம் ஒழுங்கையிலுள்ள இல 12/6 மேற்படி நில அளவைப்படத்தில் துண்டு 1 நில.பர. இலா 03 குளி 13.75 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தினை **சண்முகராசா உமாகாந்தன்** பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1113/21.02.2020ம் இலக்க உறுதியால் குறித்த நவராசா சண்முகராசா. **நவராசா இளையராசா. நவராசா யோகராசா** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் துண்டு 2 மற்றும் 3 ஆகிய ஆதனங்களுக்கு **பாலகுமாரன் பெண் ஸ்ரீமித்திரா** ஆகியவரும் துண்டு 1 என்ற ஆதனத்திற்கு **சண்முகராசா உமாகாந்தன்** ஆகியவரும் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து மேற்படி துண்டு 2 மற்றும் 3 ஆகிய ஆதனங்களுக்கு **பாலகுமாரன் பெண் ஸ்ரீமித்திரா** ஆகியவரின்தும். துண்டு 1 என்ற ஆதனத்திற்கு **சண்முகராசா உமாகாந் தன்** ஆகியவரினதும் பெயர்களில் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர் / செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

## VELANAI PRADESHIYA SABHA
### Request for
### EXPRESSION OF INTEREST

**For Recreational Activities for Tourist at Mandaitevu Eco Tourism.**

1. The Chairman now invites eligible service providers to indicate their interest in providing the Recreational Activities for Tourist to implement at **ECO TOURISM at Mandaitevu**
2. Interested service providers must provide information indicating that they are qualified to perform the services (Broachers, description of similar assignments, experience in similar conditions, availability of appropriate skilled staffs etc). Service providers may attach documents to show their qualifications.
3. Interested Service Providers may obtain further information at the address given below from **17.03.2021 to 30.03.2021 between 9.00am to 4.00pm**.
   Address: **Chairman ,Velanai Pradeshiya Sabha, Vangalavady ,velanai, Jaffna**
   Contact No: **021 221 1506, 021 221 1505,** **Fax No: 021 221 1506**
   Email: **velanaips@gmail.com**
4. A complete set of Expression of Interest (EOI) documents may be purchased by interested service providers on the submission of written application to the Velanai Pradeshiya Sabha, Vangalavady ,velanai, Jaffna **from 17.03.2021 until 30.03.2021 from 9.00am to 3.00 pm upon payments of a non-refundable fees of Rs. 1000/-. The method of payment should be by cash.**
5. Expression of Interest shall be delivered or sent by registered post to the above address on or **before 31.03.2021 at 2.00pm**.Late EOI will be rejected. EOI will be opened soon after closing in the presence of the service providers/ representatives who choose to attend.
6. The **Chairman ,Velanai Pradeshiya Sabha** reserves the right to accept or reject any EOI.
7. **Basic requirements**.
   - The service provider should ensure that he/ she should have a good business culture in Jaffna.
   - The service provider should ensure that their Tourism &boating activities and operation cannot affect the Jaffna's culture and traditions.
   - The service provider should ensure that they should have fully insurance arrangements for both boating assets and passengers.
   - The service provider should ensure that their boating activities should be feasible for environment (should be done with environmental friendly manner)
   - The service provider should keep the leisure area clean and beautiful.

N.Karunakarakurumoorthy
Chairman,
Divisional Procurement Committee,
Velanai Pradeshiya sabha,
Vangalavady ,Velanai, Jaffna.
17.03.2021

## தமிழினத்துக்கு...

இந்தப் பேரணியில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் பேதங்களை மறந்து பங்குகொள்ள வேண்டும் என்று வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடர் தற்போது நடந்துவரும் நிலையில், தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் நடந்தேறிய இன அழிப்புக்கு நீதிகோரி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மதகுருக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகியவை இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உணவு தவிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இலங்கை தொடர்பான அறிக்கை நாளைய அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், அதற்கான வாக்கெடுப்பு இடம்பெறும் காலப்பகுதியில் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு வலுச் சேர்ப்பதற்காக இன்று இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சங்கிலியன் பூங்காவில் இருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி நல்லூர் ஆலயத்தின் பின் வீதியில், தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்படும் இடத்தில் முடிவடையும்.

இந்தப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மக்கள் எழுச்சி இயக்கம், சிவில் அமைப்புக்கள், மதகுருக்கள், வடக்கு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வர்த்தக அமைப்புக்கள் எனப் பலதரப்புக்களும் ஆதரவளித்துள்ளன.

இந்தப் பேரணியில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் கலந்துகொண்டு, தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஒருமித்த குரலில் தெரிவிக்க வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ)

## புர்காவுக்கு...

கொள்ளப்படவில்லை. இது ஒரு முன்மொழிவு மாத்திரமே என்று வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

இலங்கையில் புர்கா மற்றும் நிகாப் அணிவதைத் தடை செய்வதற்கான பிரேரணை தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கைகளை சமீபத்திய ஊடக அறிக்கைகள் எடுத்துரைத்துள்ளன. இதுபோன்ற தடையை விதிப்பதற்கான தீர்மானம் அரசால் மேற்கொள்ளப்படவில்லை இது ஒரு முன்மொழிவு மாத்திரமேயாகும். இது கலந்துரையாடல்களின் கீழ் உள்ளது. ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைவாக, தொடர்ந்தும் தேசியப் பாதுகாப்பு தொடர்பில் தேவைப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்தப் பிரேரணை உருவாக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனுமான ஒரு பரந்த உரையாடலை அரசு ஆரம்பிப்பதுடன், தேவையான ஆலோசனைகள் நடைபெறுவதற்காக ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு போதுமான நேரம் எடுத்துக் கொள்ளப்படும் என்றார் . (ப-22)

## வெளிநாடுகளில்....

படுத்தவில்லை என்று தெரிய வருகின்றது. மிக மிகக் குறைவானோரே பதிவுக்கு விண்ணப்பித்துள்ளமையால், 30 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் பேர் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இருந்து நீக்கப்படும் அபாயம் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது.

வலி. வடக்கில் மீள்குடியமர்வுக்கு முழுமையாகவோ பகுதியாகவோ அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகளும் முதல் தடவையாக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இதனால் 21 ஆயிரத்து 905 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டன.

இவ்வாறு நீக்கப்பட்டவர்கள் இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ வசித்தால் அவர்கள் தமது விவரங்களைப் பதிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் தேர்தல்கள் திணைக்களத்துக்கு மிக மிகக் குறைவான அளவு விண்ணப்பங்களே கிடைத்துள்ளன. கிடைத்த விண்ணப்பங்கள் தொடர்பான ஆய்வுகள் தேர்தல்கள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2020ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வெளியிடப்படும்போது யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கை 30 தொடக்கம் 40 ஆயிரம் பேரால் குறைவடையும் அபாயம் காணப்படுகின்றது. (ஒ.5)

## ரயிலுடன்...

பேர் காயங்களுடன் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஓரிருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் பொது மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

பியர் கிராமத்தைச் சேர்ந்த, தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடாலையின் தரம் 9 மாணவனான பா.தருண் (வயது14) என்ற மாணவனே உயிரிழந்துள்ளான்.

இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நடந்துள்ளது. அநுராதபுரத்தில் இருந்து தலைமன்னார், பியருக்குச் சென்ற ரயிலுடனே தனியார் பயணிகள் பஸ் மோதியுள்ளது. இந்த பஸ் மன்னாரில் இருந்து பியர் கிராமத்துக்குப் பயணித்துள்ளது.

ரயில் கடவை ஒன்றை பஸ் கடக்க முயன்றபோது, இந்த பஸ் ரயிலுடன் மோதியது. விபத்து நடந்த சந்தர்ப்பத்தில் பஸ்ஸில் பயணிகளுடன் அதிகளவாக மாணவர்களும் பயணித்துள்ளனர். ரயிலுடன் மோதிய பஸ் தூக்கி வீசப்பட்டுப் புரண்டது. விபத்தில் சிக்கிக் காயமடைந்தவர்களை கிராம மக்களும், பொலிஸாரும், கடற்படையினரும் இணைந்து மீட்டு, நோயாளர் காவு வண்டிகள் மூலம் மன்னார் பொது மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

விபத்தில் 25 பேர் காயமடைந்துள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. அவர்களில் 16 பேர் பெண்கள் என்றும், 13க்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் படுகாயமடைந்த சிலர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து நடந்த ரயில் கடவை பாதுகாப்பான ரயில் கடவை என்றபோதும், விபத்து நடந்த நேரத்தில் ரயில் கடவைக் காவலாளி கடமையில் இருக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

ரயில் கடவைக் காவலாளிகளுக்கு ரயில்வே திணைக்களம் பொறுப்பு இல்லை என்றும், காவலாளிகளை நியமித்துக் கொடுப்பனவு வழங்குவது பொலிஸாரே என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-60,56,213)

## குருதிக்....

யாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் பெருமளவானவர்கள் குருதி வழங்க முன்வந்தனர். தனியார் பயணிகள் பஸ் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெண்கள் உட்பட 25 பேர் காயமடைந்தனர். 14 வயது மாணவன் ஒருவன் உயிரிழந்தான்.

விபத்தில் சிக்கியவர்களுக்கு குருதி ஏற்ற வேண்டியிருந்ந நிலையில், மன்னார் பொது மருத்துவமனையில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதையடுத்து உடனடியாகக் குருதிக் கொடையாளர்களின் உதவி கோரப்பட்டது.

அதையடுத்து பெரும் எண்ணிக்கையில் குருதிக் கொடையாளர்கள் மருத்துவமனையில் ஒன்றுகூடி குருதி வழங்க முன்வந்தனர். அவர்களிடம் குருதி சேகரிக்கப்பட்ட நிலையில், ஒருகட்டத்தில் நேற்று குருதி சேகரிப்பு இடைநிறுத்தப்பட்டது. எனினும் இன்று குருதிக் கொடையாளர்கள் குருதி வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, விபத்தில் சிக்கிக் காயமடைந்தவர்களை மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் கே. ஜே.பிறட்லி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (எ213)

## பருத்தித்துறையில்...

றையைச் சேர்ந்த 9 வயது மாணவி என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 624 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் எவருக்கும் தொற்று இல்லை.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 465 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பருத்தித்துறையைச் சேர்ந்த குடும்பம் ஒன்றில் சிலருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து, சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்த 9 வயது மாணவி ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் பொது மருத்துவமனையில் இருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட பெண் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் யாழ்ப்பாணம் நகர் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## மாகாணத்...

அரசின் பொறுப்பாகும். இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

அதில் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

தேர்தலை நடத்துவதில் நீங்கள் கூறுவதுபோல விசேட அக்கறையை அரசு காட்டவில்லை. மாகாண சபைகளுக்கான தேர்தலை கடந்த அரசு காலவரையறையின்றி பிற்போட்டது. நாடாளுமன்ற அமர்வை இரவு வரை நடத்தி அதற்கான சட்டம் இயற்றப்பட்டது. எனவே, இவ்விடயத்தில் அவ்வாறானதொரு அவசரம் எமது அரசுக்கு இல்லை. அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் எமது அரசமைப்பின் ஓர் அங்கம். அடிப்படைச் சட்டம். அந்த சட்டத்தை நாம் ஏற்றாக வேண்டும். கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட தவறுகளைச் சரி செய்யவேண்டும்.

அச்சம் காரணமாகவே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. அதை மீண்டும் நடத்துவதற்கான சட்டங்களை இயற்றி மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்துவது அரசின் பொறுப்பாகும். அதற்கு வெளிநாடுகளின் அழுத்தம் இல்லை- என்றார். (ற-44)

## இலங்கை...

சாட்டுகளில் இருந்து விடுபடுவதற்கு சுயாதீன உள்ளக விசாரணையை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், இறுதிக்கட்டப் போரை வழிநடத்திய இராணுவத் தளபதியுமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். சிங்களத் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் ஒளிபரப்பாகிய அரசியல் விவாத நிகழ்வில் பங்கேற்ற அவர், இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

சர்வதேச விசாரணையை எமது அரசு ஏற்கவில்லை. குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிவதற்கு உள்ளக விசாரணை முன்னெடுக்கப்படும் என்ற உறுதிமொழியே வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி தேசிய பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். போரை முன்னெடுக்கையில் சர்வதேச சட்டதிட்டங்களை நாம் முழுமையாகப் பின்பற்றினோம். போர்க்களத்தில் குற்றங்கள் இழைக்கப்படவில்லை. சிறு சம்பவங்கள் இடம்பெற்றிருந்தால் கூட அதற்கு எதிராக சட்டத்தை செயற்படுத்தினேன். இறுதிப்போரின்போது மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் நாம் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை. மெசின் கன் பயன்படுத்தவில்லை. இதனால் இறுதி நான்கு மாதங்களில் அதிக அளவில் இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

ஆனால் போர்க்களத்துக்கு வெளியில் சுனில் ரத்னாயக்க என்பவர் செய்த செயல் (மிருசுவில் படுகொலை) தவறு. அப்போது நான் யாழ். கட்டளைத் தளபதியாக இருந்தேன். சீருடை அணிந்தவர் என்பதற்காக அவ்வாறு செய்யமுடியாது. அதுகூட போர்க் குற்றம்தான்.

இறுதிப் போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டை ஏற்கமுடியாது. அதனை நிராகரிக்கின்றோம். சர்வதேசத்தில் இருந்து குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

அவர்களுக்கு சிலரால் வழங்கப்படும் தகவல்களை நம்புகின்றனர். எனவே, என்ன குற்றச்சாட்டு, எத்தனை பேர் கொல்லப்பட்டனர் மற்றும் சம்பவம் எங்கு நடைபெற்றது என்பவை தொடர்பான தகவல்களை முன்வைக்குமாறு அரசு கோர வேண்டும்.

அவ்வாறு முன்வைக்கப்பட்டால் உள்ளக விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார். (ப-44)

# அம்பிகையை தவறாக வழிநடத்தி விட்டனராம்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், மார்ச் 17**

**பிரிட்டனில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட அம்பிகை செல்வகுமாரின் போராட்டம் கைவிடப்பட்டுள்ள நிலையில், அவருக்குப் பின்புலத்தில் இருந்தவர்கள் அவரைத் தவறாக வழிநடத்தியுள்ளனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.**

கொக்குவிலில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர் சந்திப்பு நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது 17 நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட அம்பிகை தனது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர், போராட்டத்தை நிறுத்துவதற்கான காரணங்களை வெளிப்படுத்தியிருந்தார். அந்தக் கருத்துக்கள் எமக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்த தீர்மானத்தின் பூச்சிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தவை ஏமாற்றமளிக்கின்றன என்று தெரிவித்தே அம்பிகை போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். ஆனால் தனது கோரிக்கைகளில் முதலாவது கோரிக்கை முழுமையாக நிறைவேறி விட்டது என்று போராட்டத்தின் முடிவில் கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனால் அது உண்மைக்கு மாறானது.

பூச்சிய அறிக்கை வெளியான நிலையில் எமது ஆட்சேபனைகளைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை கோகுருப் நாடுகளுக்கு எழுதியிருந்தோம். பொறுப்புக்கூறல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக அணுகுவது தவிர்க்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியிருந்தோம். ஆனால் அதை ஒரு முன்னேற்றமாகக் காட்டி அம்பிகை தனது போராட்டத்தை முடித்துக் கொண்டுள்ளமை பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பெரும் ஏமாற்றமாக அமைந்துள்ளது.

நாங்கள் 2009 ஆம் ஆண்டில் இருந்து தமிழ் அரசியல் சம்பந்தமாகப் பலவற்றை சுட்டிக்காட்டி வருகிறோம். நாம் கூறுகின்றபோது அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை இருந்தாலும், நாங்கள் எமது கருத்துக்களைத் தயங்காது கூறிவருகின்றோம். காலப்போக்கில் நாம் சொன்னவை சரியானவையே என்பது நிரூபனமாகியுள்ளன. (எ319


### தவறிவிட்டது

கடந்த சனிக்கிழமை 13.03.2021 அன்று 11.10 க்கு கொடிகாமத்திலிருந்து யாழ்.நோக்கிச் சென்ற மினிபஸ்ஸில் கொடிகாமம் - கைதடி இடையில் எனது தங்க நகை தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

**தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

தொடர்பு : 077 612 8784

### வேலையாட்கள் தேவை

முறுகண்டியில் உள்ள உணவு உற்பத்தி நிலையத்திற்கு

- காசாளர்
- மனேஜர்
- உணவு உற்பத்தியாளர்
- சுத்திகரிப்பாளர் உடன் தேவை.
- உணவுபரிமாறுபவர்

இருபாலரும் தேவை

தொடர்புகளுக்கு: 0773866250

### A/L வரலாறு (2023)

வடக்கின் முதல்நிலை ஆசிரியர்
M.பத்மன்
B.A(Hons) P.G.D.E, M.A (History)
கற்பிக்கும் இடங்கள்

- D.M.I - யாழ்ப்பாணம்.
- உயர்கலைக்கல்லூரி - குளப்பிட்டி
- BITSMANS - மானிப்பாய்

A/L 2022 இற்கான அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.

ஆரம்பம்: 20.03.2021 சனிக்கிழமை

### NEW SCIENCE HALL

KANNATHIDDY JAFFNA.

2023 A/L

★ நேரடி வகுப்பு ★

CHEMISTRY

திரு.S.T. உமாசங்கர்

(கொழும்பு முன்னணி ஆசிரியர்)

ஆரம்பம் : 17.03.2021 WED 11.30 AM



Vacancy

கருத்தோவியம் கேலிச்சித்திரம் வரையக்கூடியவரா?

உதயனில் ஒரு வாய்ப்பு!

தொடர்புகளுக்கு:
artist@uthayan.com

### DMI JAFFNA A/L - 2K23

மார்ச் - 20 காலை 9.00 மணி

| வர்த்தகம் | | |
|---|---|---|
| D. Sam | T.S. ரிஷி | S.S. சிறி |

கலை

| தமிழ் | அளவையியல் | அரசியல் |
|---|---|---|
| R.S. சந்திரசேகர் | E.S. பவன் | K.S. இளங்கோ |
| இந்து நாகரிகம் | விவசாயம் | ஊடகம் |
| P. ஜோதீஸ்வரன் | V. சசி | K.V. நவநீதன் |
| வரலாறு | கிறிஸ்தவம் | ICT |
| M. பத்மன் | M. அருள்ஸ்ரீபன் | N. அம்பி |
| புவியியல் | நாடகம் | மனைப்பொருளியல் |
| N. பாபு | K. மங்களேஸ் | N.V. சசி |

தொழில்நுட்பம்

தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் (S4T)
S. தயாபரன்

உயிர்முறைமைகள் தொழில் நுட்பம் (Bio - Tech)
K. ஜெனா

பொறியியல் தொழில் நுட்பம் (E - Tech)

| N. றஜித்தன் | S. சத்தியதாஸ் | J. ஜெனா |
|---|---|---|

### EEE A/L PHYSICS

2023 Batch
Zoom Class (Bilingual)

ஆரம்பம்: 18.03.2021 (8.15 pm)

2022,2021 & Repeat Batch வகுப்புகளும் நடைபெறுகின்றன

T.P: 076 546 3054

A.Jenukananth
B.Sc Engineering (Hons)
(UOM) AMIE (SL)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.